



# தேசம்

NATION THE THESAM






Issue - 06 Once a Month August 2024



## இலங்கையில் பலருக்கும் அச்சத்தை ஏற்படுத்தும் “எண்–13” என்னும் “பேய்”

## யாழ்ப்பாணம் தமிழாராய்ச்சி படுகொலைகள் தூபியின் புனிதத்தை பேணும் பொறுப்பு யாருடையது?





## நாமல் ராஜபக்ச என்னும் “இளம் ஊழல்வாதியை களம் இறக்கியுள்ள “ராஜபக்ச

## அனைவரும் பாராட்டிய கனடா “வென்மேரி” சர்வதேச விருது விழா



# இலங்கையர்கள் பலருக்கும் அச்சத்தை ஏற்படுத்தும் 'எண் 13' என்னும் பேய்

கொழும்பிலிருந்து சிவா தமிழன்பன்

"நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்களில் இந்த "13" படாத பாடு பட்டுக்கொண்டிருக்கின்றது. சிங்கள அரசியல்வாதிகள் வெறுக்கும் எண்ணாக "13"இருந்தாலும் அவர்கள் விட முயற்சித்தாலும் விட முடியாத ,ஒழிக்க நினைத்தாலும் ஒழிக்க முடியாத ,பேசக்கூடாதென நினைத்தாலும் பேசாமல் இருக்க முடியாத ,வாக்குறுதி கொடுக்கக் கூடாதென நினைத்தாலும் கொடுக்க வேண்டியிருக்கின்ற வகையில் அவர்களை "13" மிரட்டிக்கொண்டிருக்கின்றது"

எண் 13 என்று சொன்னாலே பலருக்கும் அச்சத்தை ஏற்படுத்தும். எண் 13 பேய், ஆவி, கெட்ட சக்தி என்று அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் எதிர்மறையான பல விஷயங்களுடன் தொடர்புடையது.நீங்கள் உலகின் பல இடங்களுக்கு பயணம் மேற்கொள்ளும் போது விதவிதமான ஹோட்டல்களில் தங்கியிருக்கக் கூடும். பல கட்டிடங்களுக்கும் சென்றிருக்கக் கூடும். அதில் நீங்கள் பல முறை, ஹோட்டலில் எண் 13 அறையும் அல்லது கட்டிடத்தில் 13 ஆவது மாடியும் இல்லாமல் இருப்பதை பார்த்திருக்கலாம்.

13 என்ற எண்ணைப் பற்றி பல விஷயங்கள் பரவலாக கூறப்படுகின்றன. உலகில் அதிலும் பெரும்பாலும் மேலை நாடுகளில் 13 என்ற எண்ணைக் கேட்டாலே மக்கள் அலறுவதைக் காணலாம்.மேற்கத்திய நாடுகளில், குறிப்பாக எண் 13 என்பது மிகவும் அபசகுனமாக கருதப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் கிறிஸ்தவர்களின் நம்பிக்கையாக இருந்தாலும் அந்த "13" என்ற எண் இலங்கையையும் ஆட்சியாளர்களையும் சிங்களவர்களையும் படாதபாடு படுத்தி வருகின்றது.

இலங்கையில் புரையோடிப்போன இனப்பிரச்சினை மற்றும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் வகையில், இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் இலங்கை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன ஆகியோருக்கு இடையில் 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட 13ஆவது அரசியலமைப்பு திருத்தச்சட்ட உடன்படிக்கையே கடந்த 37 வருடங்களாக "13" என்ற வடிவில் இலங்கை அரசியலை புரட்டி எடுத்து வருவதுடன் இந்த எண்ணை குறிப்பிட்டாலே சிங்களவர்கள் அலறித்துடிக்கும் அவலமும் நீடித்து வருகின்றது.

இந்த "13" ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் ஊடாக, இலங்கையில் 9 மாகாண சபைகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன், வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் இணைந்த மாகாண சபைகளாக அப்போது அறிவிக்கப்பட்டிருந்ததுடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில்தமிழர்களுக்குமுன்னுரிமைவழங்கப்படும் வகையிலேயே இந்த "13"ஆவது அரசியலமைப்புத் திருத்தம் செய்யப்பட்டிருந்ததே சிங்களவர்களுக்கு "13"என்ற எண் கெட்ட எண்ணாக,துரதிர்ஷ்ட எண்ணாக,அபசகுன எண்ணாக,வெறுப்புக்குரிய எண்ணாக மாறி விட்டது.

இந்த 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் முதல் குழந்தையாக 1988ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட முதல் வடகிழக்கு மாகாணசபை 1990ஆம் ஆண்டிலேயே அரசாங்கத்தால் கலைக்கப்பட்டது. வடக்கு  கிழக்கு மாகாணங்களை இணைத்த மாகாண சபையானது பதினாறு மாதங்கள் மட்டுமே செயற்பட முடிந்தது.இது நடந்து 17 ஆண்டுகளின் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தனித்தனி மாகாணங்களாக இருக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி ( ஜே .வி.பி.) 2006ஆம் ஆண்டு இலங்கை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது.இந்த வழக்கின் அடிப்படையில் 2007ஆம் ஆண்டில் வட,கிழக்கு இணைப்பும் துண்டிக்கப்பட்டது. அதன் பின், தேர்தல் நடத்தப்பட்டு 2008இல் கிழக்கு மாகாணசபை உருவானது. இதன் மூலம் தமிழர்களுக்கும் இந்த "13" துரதிர்ஷ்ட எண்ணாகவே உள்ளது.

இலங்கையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் கூட இந்த "13"கெட்ட துரதிர்ஷ்ட எண்ணாக இருந்தாலும் ஜனாதிபதித் தேர்தலோ ,பாராளுமன்றத் தேர்தலோ அல்லது மாகாணசபைகளுக்கான தேர்தலோ வந்தால் வேட்பாளர்களின், கட்சிகளின் வெற்றியை தீர்மானிக்கும் எண்ணாகவும் இந்த "13" இருப்பதையும் மறுத்து விட முடியாது. அந்தளவுக்கு இந்த துரதிர்ஷ்ட எண்ணான , வெறுக்கப்படும் எண்ணான "13"தான் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் வெற்றி தோல்விகளைத் தீர்மானிக்கும் "வெற்றி" எண்ணாகவும் உள்ளது.

அதனால் தான் விரைவில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்களில் இந்த "13" படாதபாடு பட்டுக்கொண்டிருக்கின்றது. சிங்கள அரசியல்வாதிகள் வெறுக்கும் எண்ணாக "13"இருந்தாலும் அவர்கள் விட முயற்சித்தாலும் விட முடியாத ,ஒழிக்க நினைத்தாலும் ஒழிக்க முடியாத ,பேசக்கூடாதென நினைத்தாலும் பேசாமல் இருக்க முடியாத ,வாக்குறுதி கொடுக்கக் கூடாதென நினைத்தாலும் கொடுக்க வேண்டியிருக்கின்ற வகையில் அவர்களை "13" இறுகப் பிடித்து வைத்துள்ளதை அண்மைய நாட்களில் அதிகம் அவதானிக்க முடிகின்றது.




நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக களமிறங்கவுள்ள தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த தேர்தலில் தனது வெற்றியை "13" தான் தீர்மானிக்கும் என்பதை கருத்தில் கொண்டு "இந்த நாட்டில் அரசியல் முறையில் இருந்தோ அல்லது அரசியலில் இருந்தோ அகற்ற முடியாத நிரந்தரமான காரணியாக மாகாணசபை மாறியுள்ளது. 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்குவதில் பொலிஸ் அதிகாரம் போன்ற உணர்வுபூர்வமான விடயங்களுக்கு முன்னுரிமை அளிப்பது எந்த விதமான இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு கடினமானதாக அமையலாம்.எனவே முதலில் ஏனைய அதிகாரங்கள் தொடர்பில் உடன்பாட்டுக்கு வந்து நாட்டின் எதிர்காலத்திற்காக 13 ஆவது திருத்தத்தை கட்டம் கட்டமாக எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் அடுத்த வேட்பாளரான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச யாழ்ப்பாணம் சென்று" நான் அரசியல் சந்தர்ப்பவாதி அல்ல.நேராகப் பேசும் நபர் என்பதால் 13 ஆவதுஅரசியலமைப்புத் திருத்தத்தை பொலிஸ் ,காணி அதிகாரங்களுடன் நிச்சயம் நடைமுறைப்படுத்துவேன் என்ற உறுதி மொழியை உங்களுக்குத் தருகின்றேன் .உயர் சட்டப் புத்தகத்திலுள்ள 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் அமுல்படுத்தப்படும். நாட்டின் வடக்கு, கிழக்கு, மேல் என 9 மாகாணங்களிலும் உள்ள மக்களுக்கும் இந்த வாக்குறுதியை வழங்குகிறேன். இதனை நடைமுறைப்படுத்த நான் ஒருபோதும் தயங்கப் போவதில்லை" என உறுதி மொழி வழங்கியுள்ளார்.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளரும் "13"ஐப் பார்த்து நடுங்கியவர்களில் ,அதனை வெறுத்து ஒதுக்கியவர்களில் முதன்மையான கட்சியான ஜே .வி. பி. யின் தலைவருமான அநுரகுமார திசாநாயக்கவும் யாழ்ப்பாணம் சென்று " "இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு சகல தரப்பினருடனும் பேசி ஒரு புதிய அணுகுமுறையை கையாள்வதற்கு ஜே .வி.பி. அரசாங்கம் முயற்சிக்கும் .தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமை தொடர்பாக பலமான உறுதிப்பாட்டை வழங்க வேண்டியுள்ளது .அதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம் .அத்துடன் மாகாணசபை முறைமையை முழுமையாக அமுல் படுத்துவதில் மாற்றுக்கருத்தில்லை அதற்குத் நாம் இணங்கியுள்ளோம்"என்று கூறியுள்ளார்.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளரான நாமல் ராஜபக்ச," 13இன் படி வடக்கு,கிழக்கை ஒருபோதும் இணைக்கமாட்டேன் .அத்துடன் வடக்கு,கிழக்கு மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரமோ காணி அதிகாரமோ ஒரு போதும் வழங்க மாட்டேன்"என அனுராதபுரத்தில் நடத்திய தனது முதலாவது கன்னி பிரசாரக்கூட்டத்தில் சிங்களவர்களுக்கு உறுதி மொழி வழங்கியுள்ளார்.

திலித் ஜயவீர என்ற ஜனாதிபதி வேட்பாளரை நிறுத்தியுள்ள இனவாதக் கூட்டணியான விமல் வீரவன்ச ,உதயகம்மன்பில தரப்பினர் 13 ஐ ஒழிக்க வேண்டும் ,உண்மைகண்டறியும் ஆணைக்குழுவை கலைக்க வேண்டும் என்ற கோஷத்தை பிரசார ஆயுதமாக்கியுள்ளனர் இவ்வாறு ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து வேட்பாளர்கள் "13" தொடர்பிலான வாக்குறுதிகளை தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் ஒரு புறம் அள்ளி வழங்கி வர மறுபுறம் அவர்களின் கட்சிகளுக்குள்ளேயே அதற்கு எதிரான கலகக்குரல்களும் வெளிக் கிளம்புகின்றன."13 ஐ தமிழர்களுக்கு தூக்கிக் கொடுக்க அது ஒன்றும் அப்பன் வீட்டு சொத்தல்ல"வென தமது கட்சித்தலைவர்களுக்கு எதிராகவே கட்சி முக்கியஸ்தர்கள் போர்க்கொடி தூக்கியுள்ள நிலையில் "13"ஐ தேர்தல் பிரசாரத்துக்கு பயன்படுத்த வேண்டாம் என்ற வேண்டுகோளை மஹிந்த ராஜபக்ச குடும்பம் விடுக்குமளவுக்கு தேர்தல் பிரசாரங்களில் "13"பேயாட்டம் ஆடுகின்றது.

தமிழ் மக்களுக்கு "13" முழுவதுமாக நிறைவேற்றப்படுமென்ற உறுதிமொழிகள் ஜனாதிபதி வேட்பாளர்களினால் தமிழ் அரசிய கட்சிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் வழங்கப்பட்டுவரும் நிலையில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருடனான தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் சந்திப்பின்போது இலங்கைத் தமிழரசுக்கட்சியை சேர்ந்த சுமந்திரன் எம்.பி விளக்கமளிக்கையில், நாட்டின் அரசியலமைப்பில் உள்ள அதிகாரப்பகிர்வு விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தக்க தருணம் ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச ,ஜே .வி.பி.தலைவர் அநுரகுமார திசாநாயக்க ஆகியோர் அரசியலமைப்பிலுள்ள விடயங்களை முழுமையாக அமுலாக்குவதற்கு முக்கியமாக 13 ஆவது அரசியலமைப்புத்திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு தயார் என எம்முடன் நடத்திய பேச்சுக்களில் உறுதியளித்துள்ளனர் என்று கூறியுள்ளார்.

ஆனால் தென்னிலங்கை அரசியல் தலைவர்களின் இந்த உறுதிமொழியில் நம்பிக்கை கொள்ளாத இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர்,"காணி,பொலிஸ் அதிகாரங்கள் உள்ளடங்கலாக 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை அமுலாக்க அவர்கள் உடன்பட்டுள்ளார்களா "என்ற சந்தேகக் கேள்வியை சுமந்திரனிடம் எழுப்பியபோது,ஆம் அவற்றையும் உள்ளடக்கியே 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்த தயார் என உறுதியளித்துள்ளனர் .ஆகவே இதுவொரு நல்ல தருணம் என சுமந்திரன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். அத்துடன் ஜனாதிபதி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவுடனும் சுமந்திரன் 13 தொடர்பில் பேச்சு நடத்தியுள்ளார். ரணில் விக்கிரமசிங்கவும் சில உறுதிமொழிகளை வழங்கியுள்ளார்.

ஆனால் சுமார் 37 ஆண்டுகளுக்கு முன்பு கொண்டுவரப்பட்ட 13 ஆவது அரசியலமைப்புத் திருத்த சட்டத்திலுள்ள மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரத்தை இரத்து செய்யும் 22 ஆவது அரசியலமைப்பு திருத்த தனிநபர் சட்டமூலத்தை பிவிதுறு ஹெல உறுமயவின் தலைவரான உதய கம்மன்பில எம்.பி பாராளுமன்றத்தில் ஏற்கனவே சமர்ப்பித்துள்ளார். மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரத்தை இரத்து செய்யும் 22 ஆவது அரசியலமைப்பு திருத்த தனிநபர் சட்டமூலத்தை கம்மன்பில சமர்ப்பித்த போது இன்னொரு பேரினவாதியான விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி எம்.பி.யான மொஹமட் முஸம்மில் அதனை வழிமொழிந்துள்ளார்.

இதற்கமைய அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் வழங்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரத்தை .இரத்து செய்யும் வகையிலான 22 ஆவது திருத்த தனிநபர் சட்டமூலம் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டு தற்போது பாராளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எவ்வேளையிலும் அது விவாதத்திற்கு எடுக்கப்பட்டால் மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரத்தை .இரத்து செய்வதற்கு பாராளுமன்றத்தின் பேராதரவு கிடைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.ஆகவே இந்த "13"என்னும் அச்சம்தரும் , துரதிர்ஷ்ட எண்ணை வைத்து சிங்கள ஆட்சியாளர்கள் ,அரசியல்வாதிகளினால் மட்டுமன்றி தமிழ் அரசியல்வாதிகளினாலும் தமிழ் மக்கள் ஏமாற்றப்படுவதால் "13"என்பது தமிழர்களுக்கும் ஒரு துரதிர்ஷ்ட எண்ணாகவே உள்ளது.




தேசம் குரல் – ஆகஸ்ட் 2024

Thesam Publishers
தேசம்
தேசம் வெளியீட்டாளர்கள்

EDITORIAL TEAM - THESAM
GRAPHIC: HEVEN
TECHNICAL: Y.INTHUNATHAN
PRINTERS: PRINT TECK
MARKETING & DISTRIBUTION
MANAGER - Ramsankr Sivanathan: 647.891.7725

Phone: 647 848 1113
Unit #201, 3967 Lawrence Ave East, Scarbourough, ON, M1G 1S2
Email: info@thethesam.com www.thethesam.com

# கனடாவில் இயங்கிவரும் தமிழ் அமைப்புக்கள் தம்மை சுய விமர்சனங்களுக்கு உட்படுத்த வேண்டும்

மக்களுக்காக ஆரம்பிக்கப்பட்டவை அல்லது மக்கள் நலன் கருதி தொடங்கப்பட்டவை அல்லது மக்களுக்கு சேவையாற்றவென நிறுவப்பட்டவை என்ற பிரகடனங்களோடு உலகின் பல நாடுகளிலும் இயங்கிவந்த அல்லது தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் பொது அமைப்புக்களுக்கு சில ஒழுங்கு முறைகள் உள்ளன. அவற்றில், மேற்படி அமைப்புக்கள் அனைத்தும் தேவையேற்படும் போது. தம்மை சுயவிமர்சனங்களுக்கு உள்ளாக்கிக் கொள்ள வேண்டும். .இந்த ஒழுங்கை கடைப்பிடிக்காத அல்லது மேற்கொள்ள மறுத்த அமைப்புக்கள் கால ஓட்டத்தில் கரைந்து போய்விட்டதை வரலாறுகளைப் படிப்பவர்கள் நன்கு புரிந்து கொண்டிருப்பார்கள்.

உலகில் புரட்சிகரப் போராட்டங்கள் நடைபெற்று அதன் மூலம் கொடுங்கோலாட்சிகளை வீழ்த்தி மக்கள் ஆட்சிகளை நிறுவிய நாடுகளான சீனா. சோவியத் யூனியன். கியூபா போன்ற நாடுகளில் புரட்சியில் ஈடுபட்ட போராட்ட இயக்கங்கள் தேவைகள் ஏற்பட்ட போது தங்களை சுயவிமர்சனங்களுக்கு உட்படுத்தின. இதனால் பல நன்மைகள் ஏற்பட்டன. இயக்கங்களுக்குள் இருந்த உள்ளக முரண்பாடுகள் தீர்க்கப்பட்டு தீர்வுகள் காணப்பெற்றன.

இவ்வாறான அனுபவங்கள் எமது தாயகத்தில் வடக்கிலும் கிழக்கிலும் ஆரம்பிக்கப்பெற்ற விடுதலை இயக்கங்கள் மத்தியிலும் புறையோடிக்கிடந்தன என்பதை அவற்றின் செயற்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தியவர்களுக்கு நன்கு தெரிந்திருந்தது. எமது இயக்கங்கள் தமது சக உறுப்பினர்களுக்கு இடையே ஏற்படும் உ ள்ளக முரண்பாடுகளை தீர்க்க முடியாமல் முரண்பட்டு இறுதியில் தமக்குள்ளேயே துப்பாக்கிகளால் சுட்டுக்கொண்டு மரணங்களைத் தழுவிய கவலைக்குரிய சம்பங்கள் ஏராளம்.

இதைவிட பிற இயக்கங்களோடு ஏற்பட்ட புறக்காரணிகள் தொடர்பான முரண்பாடுகளை தீர்க்கும் முகமாக பேச்சுவார்த்தைகள் நடத்துவது அல்லது சந்திப்புக்களை ஏற்படுத்தி அவற்றில் தங்களை சுய விமர்சங்கள் செய்து கொள்வது போன்ற முயற்சிகள் பல தோல்வியடைந்தன. இதன் காரணமாகவே இயக்க மோதல்கள் தோன்றியும் பிற இயக்கங்கள் அழிக்கப்பட்டு எமது விடுதலைப் போராட்டம் பின்னடைவைச் சந்தித்த அனுபவங்களை நாம் பல பதிவுகள் மூலமாக கற்றுக்கொண்டுள்ளோம்.

இதைப் போலவே, கடந்த பல வருடங்களாக கனடாவில் இயங்கிவரும் தமிழ் மக்கள் சார்ந்த பொது அமைப்புக்கள் தொடர்பான பல கேள்விகள் எமது மக்கள் மத்தியில் எழுந்து நிற்கின்றன. அதுவும் மக்கள் தொடர்பான விடயங்களைக் கடந்து அரசியல் சார்ந்து செயற்படுகையில் எதிர்ப்புறத்திலிருந்தோ அன்றி உள்ளக முரண்பாடுகளாக தோற்றம் பெறுவதிலிருந்தோ, முரண்பாடுகள் விரிசல்களைச் சந்தித்து, பின்னர் பல பாதிப்புக்களை எமது கனடிய தமிழர் சமூகம் சா ர்ந்து ஏற்படுத்தியிருந்தன.

கனடாவில் நூற்றுக்கணக்கான மக்கள் அமைப்புக்கள் செயற்படுகின்றன. அவற்றில் பல ஊர் அமைப்புக்கள், நமது தாயகம் சார்ந்து செயற்படும் பாடசாலைகளின் பழைய மாணவர்கள் அல்லது மாணவிகள் சங்கங்கள் என இந்த பட்டியல் நீண்டு கொண்டே போகும். இவ்வாறான அமைப்புக்களில் அரசியல் சார்ந்த செயற்பாடுகள் இல்லாது இருப்பதனால் உள்ளக முரண்பாடுகள் தோன்றும் சந்தர்ப்பங்கள், குறைவாகவே காணப்படுகின்றன.

ஆனால் கனடாவில் அரசியல் சார்ந்த செயற்பாடுகளை தம்மகத்தே கொண்டு இயங்கிவரும் அமைப்புக்கள் சார்ந்து உள்ளக முரண்பாடுகளும் பற முரண்பாடுகளும் தோன்றி முழுமையாக கனடிய தமிழர்கள் மத்தியில் பிளவுகளையோ அன்றி முரண்பாடுகளையோ தோற்றுவிக்கின்றன. குறிப்பாக கனடாவில் இயங்கிவரும் சில முக்கிய அமைப்புக்கள் நிச்சயம் தம்மை சுயவிமர்சனங்களுக்கு உட்படுத்த வேண்டிய நிலையேற்பட்டும் அதைச் செய்யத் தவறிவிட்டன.

குறிப்பாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்திற்கான அங்கத்தவர்களை தெரிவு செய்யும் இரகசிய வாக்கெடுப்புத் தேர்தல் அ கடந்த வருடம் நடத்தப்பெற்ற போதும் அந்த தேர்தலுக்காக வேட்பு மனுக்கள் கோரப்பட்ட போதும் பல சீர்கேடுகள் இடம்பெற்றன. இதனால் மேற்படி நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தேர்தலானது நேர்மையான முறையில் நடத்தப்பட வில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. எனினும் இந்த குற்றச்சாட்டுகளை ஏற்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் தங்களை சுயவிமர்சனங்களுக்கு உட்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை உள்ளக அங்கத்தவர்களிடமிருந்தும் வெளியிலிருந்தும் விடுக்கப்பட்டன. ஆனால் அந்த கோரிக்கைகள் சரியான முறையிலும் நேர்மையாகவும் செவிமடுக்கப்படாத காரணத்தால் மேற்படி நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாடுகளும் இயங்கும் முறைகளிலும் பாரிய சரிவுகள் ஏற்பட்டுள்ளதை நாம் நேரடியாகவே காணக்கூடியதாக உள்ளது. இதைப் போன்றே ஏனைய சில அமைப்புக்களான கனடிய தமிழர் பேரவை மற்றும் கனடிய தமிழர் தேசிய அவை போன்ற மக்கள் சார்ந்த அமைப்புக்களும் இவ்வாறான சுயவிமர்சனம் செய்யும் நெறியை தங்களுக்குள்ளே அல்லது புறத்தே கடைப்பிடிக்க வேண்டியது தற்காலத்தின் மிக அவசியமான செயற்பாடாக விளங்குவதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் எமது தமிழர் சமூக மட்டத்தில் உள்ளக மோதல்கள் அன்றி பகிரங்க குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் போக்குகள் நீங்கி ஒரு சீரான நிலை தோன்றலாம் என்று 'தேசம்' இதழின் ஆசிரிய பீடத்தின் உறுப்பினர்களாகிய நாம் எமது இம் மாத இதழில் பதிவு செய்கின்றோம்.

# தொற்றும் நோய்களால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து விடுபெறுவது எப்படி?

## விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல்!

காலநிலை மாற்றத்திற்கூடாக உடல் உள ரீதியிலான தாக்கங்கள் எவ்விதமாக இருக்கிறது என்பதற்கான ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல் ஒன்று 18-08-2024 அன்று மாலை நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஹொக்கி அணியுடன் இணைந்து இந்த விழிப்புணர்வு நிகழ்வை காவேரி கலா மன்றம் ஒழுங்குபடுத்தி நடத்தியது.




விளையாட்டு வீரர்கள் உடல் ஆரோக்கியம் தொடர்பான விடயத்தை சமூகத்தில் இருப்பவர்களுக்கு முன்மாதிரியாக இருப்பது மிக சிறப்பான விடயம். எனினும், விளையாட்டு வீரர்கள் சூழலியல் பார்வையில் அக்கறை உள்ளவர்களாக இருப்பதன் ஊடாக எவ்விதமாக உடல் ஆரோக்கியம் மிக்க ஒரு சமூகத்தை கட்டியெழுப்ப முடியும் என்பதை குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே இந்த செயற்பாட்டினை காவேரி கலா மன்றம் அறிமுகப்படுத்தியது.



அந்த வகையில் காவேரி கலா மன்றம், இந்த ஆகஸ்ட் மாதத்தில் காலநிலை மாற்றம் உடல் உள ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக யாழ். மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஹொக்கி அணியினரோடு இணைந்து இந்த ஹொக்கி விளையாட்டு போட்டியை வைப்பதற்கூடாக சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த தீர்மானித்துள்ளது.

இதனூடாக சமூகத்திலே பல்வேறு நிலைகளில் இருக்கக்கூடிய சமூகமட்ட அமைப்புகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்பி, சூழலியல் சார்ந்த விடயங்களில் அதிகமான பங்களிப்புகளை நாம் கொடுக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தவுள்ளது.

குறிப்பாக ஓர் விளையாட்டு வீரர் விளையாட்டு வீரராக மட்டும் அல்லாமல் தனது நாளாந்த செயற்பாடுகளில் எவ்விதமாக சூழலியல் மேம்பாட்டுக்கு பங்களிப்பை செய்யக்கூடும், நடந்து செல்லக்கூடிய இடங்களுக்கு நடந்து செல்கின்ற பொழுது அல்லது சைக்கிளில் செல்கின்ற பொழுது ஒரு விளையாட்டு வீரனாக சூழல் மேம்பாட்டுக்கு தனது பங்களிப்பை கொடுக்கின்றான் அவ்விதமாக தொற்றும், தொற்றா நோய்கள் குறித்த விழிப்புணர்வை தனது குடும்பத்திலும் தனது விளையாட்டு கழகத்துள்ளும் தனது சமூகத்துக்குள்ளும் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற மிகச்சிறந்த ஓர் சமூக விழிப்புணர்வை முன்கொண்டு செல்கின்ற ஓர் ஊடகமாக திகழும். இதை அடிப்படையாகக் கொண்டு காவேரி கலா மன்றம் இந்த விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது.

குறிப்பாக தொற்றும் நோய்களில் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பல்வேறு நோய்கள் தற்போது எமது பிரதேசத்தில் இருக்கிறது. அந்த நோய்களில் இருந்து நாம் விடுபெறுவது சமூக மட்டத்தில் விளையாட்டு வீரர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துவர்.

குறிப்பாக தொழுநோயினால் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றபடியினால் அவைகளில் இருந்து நாம் தற்காத்துக் கொள்வதற்கான விழிப்புணர்வை பெறுவதற்கான ஒரு ஊக்கத்தையும் இந்த செயற்பாடுகள் கொடுக்கும் என்ற நோக்கத்தில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



இதில் விருந்தினர்கள், துறைசார் வைத்திய நிபுணர்கள், தொழுநோயாளர் மறு வாழ்வுக்கான சங்கத்தினர், காவேரி கலா மன்றத்தினர், யாழ்ப்பாண மாவட்ட ஹொக்கி அணியினர் என பலர் கலந்துகொண்டனர்.



# யாழ்ப்பாணம் தமிழராய்ச்சிப் படுகொலை தூபியின் புனிதத் தன்மையை பேண வேண்டிய பொறுப்பு யாருக்கு?

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னால் உள்ள தமிழராய்ச்சி படுகொலை நினைவேந்தல் தூபி வளாகமானது பராமரிப்பு இன்றி பரிதாபமான நிலையில் காணப்படுகிறது.

குறித்த தூபி அமைந்துள்ள வளாகத்தில் புற்கள் அதிகளவான வளர்ந்து காட்சியளிக்கிறது. இந்த தூபி அமைந்துள்ள பகுதியானது புனிதத்துவம் மிக்க ஒரு இடமாக கருதப்படுகிறது.



குறித்த இடத்தில் நினைவேந்தல் செய்வதற்கு மாத்திரம் அந்தக் காலப் பகுதிகளில் கட்சிகளை சேர்ந்தவர்கள் வந்து செல்கின்றனர். ஆனால் அந்த இடமானது மற்றைய நாட்களில் எவ்வாறு இருக்கிறது என்பதை யாரும் கருத்தில் கொள்வதில்லை.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிவரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலக தமிழாராய்ச்சி மாநாட்டில் ஏற்பட்ட கலவரத்தில் ஒன்பது பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

உலகலாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடாத்தவிடாமல் அப்போதைய சிறிமாவோ பண்டார நாயக்க தலைமையிலான அரசு, பொலிஸாரை அனுப்பி கலவரத்தை ஏற்படுத்தியது.

இதன்போது ஒன்பது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். தமிழர்கள் மனத்தில் நீங்காத வடுக்களாக இந்தப்படுகொலைச் சம்பவம் பதியப்பட்டது. அதன் வெளிப்பாடாகவே இந்த நினைவேந்தல் தூபியானது அமைக்கப்பெற்றது.

ஆகையால் குறித்த தூபி அமைந்துள்ள பகுதியானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இடமாக காணப்படுகிறது. ஆகையால் வெளிநாட்டவர்களும் சுற்றுலாப்பயணிகளும் வருகை தரும் சந்தர்ப்பங்களும் உள்ளன. இந்நிலையில் அவர்கள் குறித்த பகுதிக்கு வரும்போது இவ்வாறான நிலையில் காணப்பட்டால் அது ஒட்டுமொத்த தமிழ் சமூகத்துக்கும் ஒரு இழுக்காகவே காணப்படும்.



எனவே குறித்த பகுதியை சுத்தம் செய்து, அதன் புனிதத் தன்மையை பேண வேண்டிய பொறுப்பை யாரிடம் ஒப்படைப்பது என்பதே அனைவராலும் எதிர்பார்க்கப்படும் விடயமாகும்.

# மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் இளம் தாய் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வைத்தியசாலை தரப்பு ஒத்துழைக்க வேண்டும்.

## மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன்

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் இளம் தாய் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான நீதியும்,நியாயமும்,கிடைக்க வைத்தியசாலை தரப்பினர் நீதியுடன் நடந்து கொள்வோம் என கூறுகிறார்கள்.அவர்கள் கூறுகின்ற வார்த்தை உண்மையாக இருந்தால் அவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

-மன்னாரில் 06-08-2024 அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை ஊடக சந்திப்பு இடம் பெற்றது. குறித்த ஊடக சந்திப்பில் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் சட்டத்தரணி பா.டெனிஸ்வரன்,மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் மற்றும் உயிரிழந்த பெண்ணின் கணவர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர் இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,,,

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் இடம்பெற்ற மரியராஜ் சிந்துஜா (வயது-27) வின் மரணத்தை தொடர்ந்து அவரது கணவர் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் கவனத்திற்கு உடன் கொண்டு வந்த நிலையில்,பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்ற நோக்குடன் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறோம்.

வைத்தியசாலை தரப்புடன் உடனடியாக தொடர்பு கொண்டு,குறித்த விடயம் தொடர்பாக அவர்களிடம் வலியுறுத்தி தொடர்ந்தும் விசாரனைகள் சம்மந்தமாகவும் ஒவ்வொரு நாளும் விசாரித்து வருகிறோம்.

உள்ளக ரீதியான வைத்தியசாலையின் விசாரனைகள் நிறைவடைந்துள்ளன.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசாரனைகளும் நிறைவடைந்துள்ளன.வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் விசாரனைகளும் நிறைவடைந்துள்ளன.

கள அறிக்கையும் முடிவடைந்துள்ளன.நான்கு விதமான முதல் கட்ட விசாரணை தற்போது முடிவடைந்துள்ளது.அடுத்த கட்டமாக மத்திய சுகாதார அமைச்சினால் இவ்வாரம் மன்னார் மாவட்ட டிபாது வைத்தியசாலைக்கு விசாரனைக்குழு வருகை தந்து முதல் கட்ட விசாரணைகளை முன்னெடுக்க உள்ளனர்.

இடம் பெற்ற நான்கு கட்ட விசாரணைகளின் போது சில நபர்கள் குற்றவாளிகளாக, குற்றம் சாட்டப்பட்ட கூடியவர்களாக சம்பவ தினத்தன்று கடமையில் இருந்தவர்கள் அசட்டை யினமாக நடந்து கொண்டுள்ளார்கள் என சிலரை அடையாளமிட்டுள்ளார்கள்.

அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இரு வேறு தரப்பாக வைத்தியர்களுக்கு மத்திய சுகாதார அமைச்சும், ஏனையவர்களுக்கு வடமாகாண சுகாதார அமைச்சுக்கும் வைத்திய தரப்பினராலும்,ஏனைய விசாரணை தரப்பினராலும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஆகவே பரிந்துரைக்கப்பட்டவர்கள் மீது விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என நாங்கள் வலியுறுத்துகிறோம். பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயம் கிடைக்க வேண்டும்.நோய் வாய் பட்ட நிலையில் அவர் வைத்தியசாலைக்கு வரவில்லை.

சாதாரண ஒரு விடையத்தை கூட அவர்களின் கவனயீனமான செயல்பாடு ஒரு மரணத்தை ஏற்படுத்தியுள்ளது.15 நாட்களை கொண்ட பிள்ளையின் தாய் மரணிப்பது என்பது பிறந்த பிள்ளையின் எதிர் காலத்தை கேள்விக் குறியாக்கியுள்ளது.



எனவே வைத்தியத்துறை இவ்வாறான மோசமான நிலைப்பாட்டிற்கு தார்மிக பொறுப்பேற்க வேண்டும். எனவே தொடர்ச்சியாக சாட்டுப்போக்கு பதில்களை கூறி எடுக்கப்பட்ட விசாரணை அறிக்கைக்கு அமைவாக செயல்படாமல் விடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

கடந்த காலங்களில் கூட மருத்துவத்துறைக்கு எதிராக தீர்மானங்கள் எடுக்கப்பட்டாலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

கிளிநொச்சியில் பெண்ணின் கர்ப்பப்பை அகற்றப்பட்ட விசாரணை அப்படியே காணாமல் போய் விட்டது. யாழ்ப்பாணத்தில் சிறுமி ஒருவரின் கை அகற்றப்பட்ட மை தொடர்பான விவகாரம் பேசு பொருள் அற்று போய்விட்டது.வவுனியா விவகாரமும் காணாமல் போய் விட்டது.

கிளிநொச்சியில் கொரோனா வைத்தியசாலையில் பல லட்சம் ரூபாய் ஊழல் என நிரூபிக்கப்பட்டு பெயர் குறிப்பிட்ட நபர்கள் மீது விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என விசாரணை குழு நியமிக்கப்பட்ட போதும் இன்று வரைக்கும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.குற்றம் சாட்டிய நபரை பொலிஸ ார் விசாரணைக்கு அழைத்தனர்.

மன்னார் வைத்தியசாலையிலும் கடந்த காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

அதற்கு எதிராக நாங்கள் போராட்டங்களை முன்னெடுத்து குறிப்பிட்ட காலங்களில் இவ்வாறான ஒரு சம்பவங்கள் இடம் பெறாத வகையில் தடுத் திருந்தோம்.எனினும் அவர்களின் கவனயீனமான செயல்பாடுகள் இந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளது. தற்போது வைத்தியசாலையில் 61 வைத்தியர்கள் உள்ளனர்.

56 வைத்தியர்கள் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.5 வைத்தியர்களே மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.மன்னார் மாவட்டத்தில் இருந்து நூற்றுக்கணக்கான வைத்தியர்கள் வெளி மாவட்டங்களில் கடமையாற்றுகின்றனர். எனவே நீங்கள் மீண்டும் மன்னாருக்கு வந்து மன்னார் மாவட்டத்தில் குறைந்த வருடங்களாவது கடமையாற்ற வேண்டும்.அதற்கான சூழலை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

மன்னார் மாவட்ட வைத்தியர்கள் மன்னாரிற்கு பணிக்காக வருகிறது இல்லை.அதன் விளைவாக வெளி மாவட்டங்களில் இருந்து இங்கு வந்து பணி செய்கின்ற நிலை உள்ளது.எனவே இந்த நிலையை மன்னார் வைத்தியர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே பாதிக்கப்பட்டவருக்கு நியாயம் கிடைக்க வேண்டும்.விசாரணை முழுமை பெற சில நாட்கள் காத்திருக்க வேண்டும்.விசாரணை நிறைவடைந்து வைத்தியசாலை தரப்பினராலும்,மத்திய சுகாதார அமைச்சினாலும் எவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றது என்பதற்காக நாங்கள் சில நாட்கள் காத்திருக்கின்றோம்.

குறித்த பெண்ணின் உடற்கூறு அறிக்கை இன்னும் வரவில்லை.

குறித்த அறிக்கையும் இவ் வாரம் வெளிவரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.குறித்த அறிக்கையும் வெளிவந்த பின்னர் 3 அல்லது 4 நாட்களுக்குள் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்குவதற்கான வழி ஏற்படுத்த வேண்டும்.இல்லை என்றால் நாங்கள் நீதிமன்றத்தை நாடுவதற்கான நடவடிக்கைகளை எடுப்போம்.

மேலும் உயிரிழந்த பெண்ணுக்கு இழப்பீட்டையும் குறித்த குழந்தையின் எதிர்காலத்திற்கான வழி வகையையும் ஏற்படுத்த வேண்டும்.

அவர்கள் நஷ்ட ஈட்டையும் வழங்க முன்வர வேண்டும்.பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான நீதியும்,நியாயமும்,கிடைக்க வேண்டும். வைத்தியசாலை தரப்பினர் நீதியுடன் நடந்து கொள்வோம் என கூறுகிறார்கள்.அவர்கள் கூறுகின்ற வார்த்தை உண்மையாக இருந்தால் அவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்.என அவர் மேலும் தெரிவித்தார்.

# நாமல் ராஜபக்ச என்னும் மற்றுமொரு 'இளம் ஊழல்வாதியை' களமிறக்கியுள்ள "ராஜபக்சக்கள் குடும்பம்"

"எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவது பொதுஜன பெரமுனவினதோ அதன் வேட்பாளர் நாமல் ராஜபக்சவினதோ இலக்கு அல்ல. தமது கட்சியை பாதுகாத்து எம்.பி.க்களை தக்கவைப்பதுடன் ஆதரவாளர்களுக்கும் புத்துணர்வூட்டும் அதேவேளை பொதுஜன பெரமுனவை உடைத்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கடி கொடுப்பதுடன் எதிர்கால ஜனாதிபதியாக வடிவமைக்கப்படும் நாமல் ராஜபக்சவை வெள்ளோட்டம் விட்டுப்பார்க்கும் முயற்சியாகவும் மஹிந்த தரப்பு இந்த தேர்தலை பயன்படுத்த நினைக்கின்றது"

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும்செப்டம்பர்மாதம்21ஆம்திகதி சனிக்கிழமை நடத்தப்படவுள்ள நிலையில் ஜனாதிபதி கதிரையை கைப்பற்றுவதற்கு பலமுனைப்போட்டி ஏற்பட்டுள்ளது மட்டுமன்றி என்றுமில்லாதவாறு இம்முறை பிரபல வேட்பாளர்கள் பலர் களமிறங்கியுள்ளதால் தேர்தல் களத்தில் எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்பதுடன் யாருக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்பதனைக்கூட கணிக்க முடியாத ஜனாதிபதித் தேர்தலாகவும் மாறிப்போயுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க சுயேட்சை வேட்பாளராக களமிறங்கியுள்ள நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தொலைபேசி சின்னத்திலும் தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க திசைகாட்டி சின்னத்திலும் களமிறங்குவதுடன் ராஜபக்ச சகோதரர்களின் குடும்பக்கட்சியான பொதுஜன பெரமுனவிலிருந்து "தாமரை மொட்டு"சின்னத்தில் குடும்பவாரிசாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மூத்த மகனும் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரும் தற்போதைய எம்.பி.யுமான நாமல் ராஜபக்ச களமிறங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளமை தற்போதுவரை இருந்த தேர்தல் கள நிலைமைகளை புரட்டிப்போட்டுள்ளது.

இவர்கள் மட்டுமன்றி சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மாற்றுக்குழுவின் சுயேட்சை வேட்பாளராக முன்னாள் நீதி அமைச்சரும் எம்.பி.யுமான விஜேதாஸ ராஜபக்ச , பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. யான முன்னாள் இராணுவத்தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மற்றும் தமிழ்மக்கள் சார்பில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் எனப் பல பிரபலங்கள் இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் களமிறங்குவதால் தான் இம்முறை ஜனாதிபத் தேர்தல் பலமுனைப்போட்டியாக மாறியுள்ளது.

ஏற்கனவே இந்த நாட்டை ஆட்சி செய்து அழித்த நிலையில் மக்கள் போராட்டத்தினால் விரட்டியடிக்கப்பட்ட ராஜபக்சக்கள் நாட்டில் தலைமறைவாக திரிந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி பதவியை கொடுத்த புண்ணியத்தினால் மக்களுக்கு தலை காட்ட முடிந்த நிலையில் தற்போது மீண்டும் ஆளத்துடிக்கும் ஆசையினாலும் கட்சியை பாதுகாக்க வேண்டியதேவையினாலும் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக ,மஹிந்த வாரிசாக சமல், கோத்த ,பசில் ராஜபக்சக்களின் பெறாமகனாக நாமல் ராஜபக்ச களமிறங்குகின்றார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி எப்படி பண்டாரநாயக்க குடும்பத்துக்கு சொந்தமானதாகவிருந்ததோ ஐக்கிய தேசியக்கட்சி எப்படி சேனநாயக்கவின் குடும்பத்துக்கு சொந்தமானதாகவிருந்ததோ அதேபோன்றே ராஜபக்ச குடும்பத்துக்காகவே இந்த தாமரை மொட்டு சின்னத்தைக்கொண்ட பொதுஜன பெரமுன கட்சி மகிந்த ராஜபக்சவினால் உருவாக்கப்பட்டுள்ளதுடன் அதன் ஜனாதிபதி வேட்பாளராக தற்போது நாமல் ராஜபக்சவும் அறிவிக்கப்பட்டுள்ளார். இதன் மூலம் இலங்கையில் குடும்ப ஆட்சி, குடும்ப அரசியல் தற்போதைக்கு முடிவுக்கு வரப்போவதில்லையென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசியலில் குடும்ப ஆதிக்கம் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழான பழைய சட்ட சபைக் காலத்திலிருந்தே தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சி காலத்தில் டி.எஸ். சேனநாயக்கவின் மறைவுக்குப் பின்னர் மகன் டட்லி சேனநாயக்காவும் மருமகன் சேர் ஜோன் கொத்தலாவலையும் பிரதமர்களாகப் பதவி வகித்தனர். ஐக்கிய தேசியக்கட்சியின் முதல் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கவின் அமைச்சரவையில் விவசாய அமைச்சராக அவரது மகன் டட்லி சேனநாயக்க இடம்பெற்றதுடன் தந்தைக்குப் பின் பிரதமராகவும் பணியாற்றினார். இவர் பிரமச்சாரி. .டட்லியின் மறைவையடுத்து ஐ.தே.க.வின் தலைமைத்துவத்தை ஜே.ஆர்.ஜெயவர்தன கைப்பற்றிய பின்னரே சேனநாயக்க குடும்பத்தின் அரசியல் ஆதிக்கம் அஸ்தமித்தது.



எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவம் 2005 ஆம் ஆண்டு வரை அவரது குடும்பத்தின் ஆதிக்கத்திலேயே இருந்தது. பண்டாரநாயக்கவின் மறைவுக்குப் பின்னர் அவரது மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆதிக்கத்திலும் அடுத்து மகளான சந்திரிக்கா பண்டாரநாயக்ககுமாரணதுங்காவின் ஆதிக்கத்திலும் இருந்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டார நாயக்கவின் மறைவின் பின்னர் அவரது மனைவி சிறிமாவோ பண்டார நாயக்க பிரதமராகவும் மகள் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்க, ஜனாதிபதியாகவும் மகன் அனுர பண்டாரநாயக்க அமைச்சர் மற்றும் சபாநாயகர் பதவிகளையும் மைத்துனர் அனுருத்த ரத்வத்த பாதுகாப்பு அமைச்சராகவும் பதவி வகித்த நிலையில் அனுருத்த ரத்வத்தவின் மகன் லொகான் ரத்வத்த தற்போது இராஜாங்க அமைச்சராக உள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி 2005 ஆம் ஆண்டே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆதிக்கத்திற்குள் வந்தது. பின்னர் 2015 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்சவின் கைகளிலிருந்து பறிக்கப்பட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜனாதிபதி மைத்திரி பல சிறிசேனவின் கைகளுக்கு வந்து இன்று தலைவர் யார் என்றே தெரியாத தத்துப் பிள்ளையாகவுள்ளது.

முதல் முதலாக 2005 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக தெரிவானவுடன் சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தை கைப்பற்றியதையடுத்து கட்சிக்குள்ளும் ஆட்சியதிகாரத்திலும் அவரது குடும்பத்தவர்களின் அரசியல் செல்வாக்கு முன்னைய அரசியல் ஆதிக்கக் குடும்பங்கள் காட்டியிராத அளவுக்கு முனைப்புப் பெற்றது. 2005 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றவுடனேயே மகிந்த ராஜபக்ச தனது பரம்பரையின் அரசியல் வாழ்வு பற்றிய பெருமைகளை நினைவூட்டத் தொடங்கினார். ராஜபக்ச குடும்ப ஆட்சி கோலோச்சத்தொடங்கியது.

ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ச பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக பசில் ராஜபக்ச சபாநாயகராக சமல் ராஜபக்ச , பாதுகாப்பு அமைச்சின் செயலராக கோத்தபாய ராஜபக்ச என சகோதரர்கள் ஆட்சி நடத்த,மஹிந்த ராஜபக்சவின் மகனான நாமல் ராஜபக்ச அமைச்சராகவும் , சமல் ராஜபக்சவின் மகனான சசீந்திர ராஜபக்ச இராஜாங்க அமைச்சராகவும் ராஜபக்சக்களின் சகோதரியின் மகனான நிபுண ரணவக்க பாராளுமன்ற உறுப்பினர் எனப் பதவி வகிக்க ,இவர்களின் குடும்ப உறவுகள் ஏனைய அதிகாரங்களையும் துறைகளையும் திணைக்களங்களையும் பங்கு போட்டுக்கொள்ள ராஜபக்ச குடும்ப விருட்சம் கிளை விட்டுப் பரவியது.

இந்நிலையிலேயே தனது தந்தையும் அரசியல்வாதியுமான ராஜபக்ச பரம்பரையின் அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டிடவேண்டுமென முடிவெடுத்த ராஜபக்ச சகோதரர்கள் அதற்காக நன்கு திட்டமிட்டு தமது தாய்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை உடைத்து பொதுஜன பெரமுன என்ற கட்சியை உருவாக்கி அதன் தலைவர் பதவியை மகிந்த ராஜபக்ச ஏற்றுக்கொண்டார் .19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினால் தான் மீண்டும் ஜனாதிபதியாக முடியாது என்பதினாலேயே தனது சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளருமான கோத்தபாய ராஜபக்சவை தனது குடும்பத்தின் கட்சியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக கடந்த 2019 ஜனாதிபதித்தேர்தலில் தாமரை மொட்டு சின்னத்தில் களமிறக்கி வெற்றி பெற வைத்தார்.

ஆனால் ராஜபக்ச குடும்பத்தின் கோத்தபாய ராஜபக்ச தலைமையிலான ஆட்சியில் இராணுவ சர்வாதிகாரம். ஊழல் ,மோசடிகள் ,மனித உரிமை மீறல்கள் .அடக்குமுறைகள் அதிகரித்துப்போனதால் பொறுமையிழந்த மக்கள் வீதிக்கிறங்கிப்போராடியதினால் 2022ஆம் ஆண்டு ராஜபக்சக்களின் குடும்ப ஆட்சி முடிவுக்கு வந்து ஜனாதிபதியாக விருந்த கோத்தபாய ராஜபக்ச பதவியிலிருந்து நாட்டிலிருந்தும் தப்பியோடினார். பிரதமராக மஹிந்த ராஜபக்சவும் நிதி அமைச்சராகவிருந்த பசில் ராஜபக்சவும் பதவிவிலக ஏனையவர்களான சமல் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச, சசீந்திர ராஜபக்ச ஆகியோர் பதவி இழக்க,ராஜபக்ச குடும்பத்தின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

இவ்வாறான நிலையில் மக்களிடமிருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ள ஐக்கியதேசியக் கட்சியின் தலைவராக பாராளுமன்றத்தை தேசியப்பட்டியல் எம்.பி.யாக பிரதிநிதித்துவப்படுத்திய ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கி தம்மையும் தமது கட்சியும் ராஜபக்சக்கள் பாதுகாத்துக்கொண்டனர். எனினும் இரு தரப்புக்குள்ளும் முரண்பாடுகள் தொடர்ந்த நிலையில் ஜனாதிபதித்தேர்தலை நடத்த வேண்டிய காலம் நெருங்கியதினால் உள்ளக முரண்பாடுகள் வெளிப்படையாக வெடித்தன. மீண்டும் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் ஆதரவைக்கோரிய நிலையில் அது நிராகரிக்கப்பட்டு தமது கட்சி சார்பில் தனி வேட்பாளர் இறக்கப்படுவார் என பொதுஜன பெரமுன அறிவித்தது.

தொடர்ச்சி 07 பக்கம்

# நாமல் ராஜபக்ச என்னும் மற்றுமொரு 'இளம் ஊழல்வாதியை' களமிறக்கியுள்ள "ராஜபக்சக்கள் குடும்பம்"

06 பக்கம் தொடர்ச்சி...

இதனையடுத்து தான் மீண்டும் ஜனாதிபதியாக வேண்டும் என்பதற்காக ரணில் விக்கிரமசிங்க ஒரு பக்கத்தால் பொதுஜன பெரமுனவை உடைத்து 92 எம்.பி.க்களை தன்பக்கம் இழுத்துக்கொள்ள , மறுபக்கத்தால் பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி வைத்திருந்த விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, உதய கம்மன்பில தலைமையிலான பிவிருது ஹெல உறுமய, வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி, மற்றும் சிறிலங்கா கம்யூனிஸ் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, யுத்துகம அமைப்பு என்பனவும் பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறின.

அதுமட்டுமன்றி கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது ராஜபக்ச சகோதரர்களின் பொதுஜன பெரமுன கட்சியுடன் இணைந்த பங்காளிக்கட்சிகளாகவிருந்த தற்போது அமைச்சரவையிலும் பாராளுமன்றத்திலும் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி, இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான் )தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்கு தமிழர் கழகம் , அதாவுல்லா எம்..பி. தலைமையிலான தேசிய காங்கிரஸ் உள்ளிட்ட இன்னும் சில கட்சிகளும் ரணில் விக்கிரமசிங்க பக்கம் சென்று விட்டன.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக பிரபல வர்த்தகரும் எம்.பி.யுமான தம்மிக்க பெரேரா அறிவிக்கப்படவிருந்தமையே பொதுஜன பெரமுனவிலிருந்து 92 எம்.பி.க்களும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கவும் பங்காளிக்கட்சிகள் வெளியேறவும் காரணம் என்பதனை இறுதியில் தெரிந்து கொண்ட நிலையிலேயே பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்சவை அறிவித்து ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அவருக்கு ஆதரவளித்த 92 பொதுஜன பெரமுன எம்.பி.க்களுக்கும் "செக்"வைத்துள்ளது மஹிந்த ராஜபக்ச தரப்பு. ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச என்ற அறிவிப்பினால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் பொதுஜன பெரமுனவின் 92 எம். பி.க்களில் பலர் தமது நிலைப்பட்டை மாற்றுவார்கள் என ராஜபக்சவினர் எதிர்பார்க்கின்றனர்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவது பொதுஜன பெரமுனவினதோ அல்லது அதன் வேட்பாளர் நாமல் ராஜபக்சவினதோ இலக்கு அல்ல. தமது கட்சியை பாதுகாத்து எம். பி.க்களை தக்கவைக்கும் அதேவேளை பொதுஜன பெரமுனவை உடைத்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கடி கொடுப்பதேயாகும். அத்துடன் எதிர்கால ஜனாதிபதியாக வடிவமைக்கப்படும் நாமல் ராஜபக்சவை வெள்ளோட்டம் விட்டுப்பார்க்கும் முயற்சியாகவும் மஹிந்த தரப்பு இந்த தேர்தலை பயன்படுத்த நினைப்பதுடன் இளைஞர்களின் வாக்குகளே ராஜபக்சக்களின் இலக்காகவும் உள்ளது. அத்துடன் இந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் கட்சி ஆதரவாளர்களுக்கு புத்துணர்வூட்டுவதுடன் அடுத்த பாராளுமன்றத்தேர்தலில் எதிர்கட்சியாகி மக்கள் மனங்களை மீண்டும் வென்று அதன்மூலம் மீண்டும் ஆட்சிபீடம் ஏறவேண்டும் என்பதே ராஜபக்சக்களின் திட்டம். அதற்காக ராஜபக்சக்கள் எந்த எல்லை வரைக்கும் செல்வார்கள் என்பது ஒன்றும் இரகசியமானதல்ல

# எமது தாயகத்தின் சர்வதேச ஓட்ட வீராங்கனை முள்ளியவளையைச் சேர்ந்த திருமதி அகிலத்திருநாயகி அனந்தசயனனை கௌரவித்த மார்க்கம் Boxgrove Seniors Community Wellness Club அமைப்பினர்

கடந்த 11-08-2024 அன்று ஞாயிற்றுக்கிழமையன்று அஜக்ஸ் மாநகரில் நடைபெற்ற 'வென்மேரி' சர்வதேச விருதுகள் வழங்கும் விழாவில் 'விளையாட்டுத்துறை சாதனையாளருக்கான' விருதினைப் பெறுவதற்காக கனடாவிற்கு விசேடமாக அழைக்கப்பெற்றிருந்தவர் எமது தாயகத்தின் சர்வதேச ஓட்ட வீராங்கனை முள்ளியவளையைச் சேர்ந்த திருமதி அகிலத்திருநாயகி அனந்தசயனன் ஆவார்.

அன்னாரை சிறப்பாக கௌரவிக்கும் முகமாக மார்க்கம் Boxgrove Seniors Community Wellness Club அமைப்பினர் நேற்று 14-08-2024 புதன்கிழமையன்று மாலை மார்க்கம் ஆர்மெடேல் சன சமூக நிலைய மண்டபத்தில் ஒரு சிறப்பு வைபவத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.



அதற்கு மன்றத்தின் தலைவி சுந்தரேஸ்வரி யோகராஜா அவர்கள் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினர்களாக மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி அவர்களும் மார்க்கம் மாநகரசபை உறுப்பினர் யுனைற்றா நாதன் அவர்களும் 'உதயன்' பத்திரிகை லோகேந்திரலிங்கம் அவர்களும் அழைக்கப்பெற்றிருந்தனர்.

அங்கு உரையாற்றிய Boxgrove Seniors Community Wellness Club அமைப்பின் தலைவி திருமதி சுந்தரேஸ்வரி யோகராஜா தனது உரையில் "ஓட்ட வீராங்கனை முள்ளியவளையைச் சேர்ந்த திருமதி அகிலத்திருநாயகி அனந்தசயனன் தனது அயராத உழைப்பினாலும் தொடர் பயிற்சியினாலும் உலக விளையாட்டு ரசிகர்கள் வியக்கும் வண்ணம் சாதனைகள் புரிந்துள்ளார். அவர் இலங்கையில் மாத்திரமல்ல ஜப்பான்-பிலிப்பைன்- தாய்லாந்து- இந்தியா போன்ற நாடுகளிலும் இடம்பெற்ற உலக ஓட்டப் போட்டிகளில் பங்குபற்றி பதக்கங்களையும் பணப்பரிசுகளையும் பெற்றுள்ளார். அவ்வாற சாதனையாளரை கனடா வாழ் மக்கள் சார்பில் நாம் கௌரவிப்பதில் பெருமையடைகின்றோம்."' என்று உரையாற்றிய பின்னர் பாராட்டு பத்திரம் வழங்கியும் பொற்கிழி வழங்கியும் வீராங்கனை அகிலத்திருநாயகி அனந்தசயனன் அவர்களைக் கௌரவித்தார்.



தொடர்ந்து உரையாற்றிய மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி அவர்களும் மார்க்கம் மாநகரசபை உறுப்பினர் யுனைற்றா நாதன் அவர்களும் 'உதயன்' பத்திரிகை லோகேந்திரலிங்கம் ஆகியோரும் 'கனடா வென்மேரி' விருதைப் பெற்ற வீராங்கனை அகிலத்திருநாயகி அனந்தசயனன் அவர்களை வேறு பட்ட வகையில் பாராட்டி வாழ்த்துப் பத்திரங்களையும் வழங்கினார்கள்.
தொடர்ந்து அமைப்பின் உறுப்பினர்கள் பலரும் அகிலத்திருநாயகி அனந்தசயனன் அவர்களைப் பாராட்டி உரையாற்றினார்கள்'

- சத்தியன்-






தேசம் பத்திரிக்கையில்
விளம்பரம் செய்ய அழையுங்கள்
647-891-7725

# அனைவராலும் பாராட்டப்பெற்ற விழாவாக கனடாவில் நடைபெற்ற ‘வென்மேரி சர்வதேச விருதுகள்’ வழங்கும் விழா

**சத்தியன் - கனடா**

2022ம் ஆண்டு முதற் தடவையாக யாழ்ப்பாணத்திலும் 2023ம் ஆண்டு பிரான்ஸ் தேசத்திலும் 2024ம் ஆண்டு, அதாவது கடந்த 11-08-2024 அன்று ஞாயிற்றுக்கிழமையன்று கனடாவின் அஜக்ஸ்’ நகரிலும் நடத்தப்பெற்ற ‘வென்மேரி சர்வதேச விருதுகள் வழங்கும் விழா அனைவராலும் பாராட்டப்பெற்ற விழாவாக நடைபெற்றது.

மேலும் மிக அண்மையில் கனடாவில் நடைபெற்ற ஏனைய விழாக்களை விட அதிகளவு பேசப்பெறும் ஒரு வ ‘வென்மேரி சர்வதேச விருதுகள்’ வழங்கும் விழாவாகவும் தகுதிவாய்ந்த சாதனையாளர்கள் 19 பேர் உலகின் பல நாடுகளிலிருந்தும் அழைக்கப்பெற்று கௌரவிக்கப்பெற்ற விருது விழாவாகவும் இவ்வருடத்தின் விழா அமைந்தது என்றால் அது மிகையாகாது.

வென்மேரி சர்வதேச விருதுகள்’ வழங்கும் விழாக்குழுவின் நிறுவனர் அனுரா வென்சலாஸ் தலைமையில் அவர் சார்ந்து குடும்பங்கள் சார்ந்த அங்கத்தவர்கள் மற்றும் பலர்வெளிநாடுகளிலிருந்து கனடாவிற்கு வந்து இவ்வருட விருது விழாவைச் சிறப்பித்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

வென்மேரி சர்வதேச விருதுகள்’ வழங்கும் திட்டத்தின் தேர்வுக்குழுவிற்கு தலைவராக விளங்கும் முன்னாள் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை விரிவுரையாளர் பேராசிரியர் சிவலிங்கராஜா யாழ்ப்பாணத்திலிருந்து கனடாவிற்கு வருகை தந்திருந்து அன்றையை விழாவின் தலைமையுரையை ஆற்றினார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி விழாவின் சிறப்பு விருந்தினராக மார்க்கம் தோர்ண்ஹில் தொகுதியின் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி கலந்து சிறப்பித்து வாழ்த்துரையும் வழங்கினார்.

சுமார் 500 பார்வையாளர்கள் கலந்து கொண்ட விருது விழாவின் சபையைப் பார்க்க அனைவரும் உற்சாகம் அடைந்ததாகவும் அங்கு உரையாற்றிய சிறப்பு விருந்தினர்கள் தங்கள் மன எண்ணத்தை எடுத்துரைத்தார்கள்.

விருது விழாவை தமிழில் ஜஸ்ரின் போல் அவர்களும் ஆங்கிலத்தில் யாழினி அவர்களும் தொகுத்து வழங்கினார்கள்.

இவ்வருடத்தின் ‘வென்மேரி சர்வதேச விருதுகள்’ வழங்கும் விழாவில் சாதனையாளர்களுக்கான விருதுகளைப் பெறுவதற்காக கனடாவிலிருந்து பலர் தெரிவு செய்யப்பெற்றிருந்தார்கள்

அவர்களின் பெயர்கள் பின்வருமாறு:- பேராசிரியர் நா. சுப்பிரமணியன் அவர்கள்- ‘இன்னிசை வேந்தர்’ பொன் சுந்தரலிங்கம் அவரம்கள்- பேராசிரியர்அ. ஜோசப் சந்திரகாந்தன் அவர்கள்- ஒலிபரப்பாளர் வி. என். மதியழகன் அவர்கள்- நடன ஆசிரியை சாந்தா பொன்னுத்துரை அவர்கள்- பேராசிரியர் நடேஸ் பழனியர் அவர்கள்- எழுத்தாளர் கந்தையா சண்முகலிங்கம் அவர்கள்- மற்றும் சிந்தனைப் பூக்கள் பத்மநாதன் அவர்கள்- ஆகியோரும் அடங்குவார்கள். மேலும் வெளிநாடுகளிலிருந்து தகமைபெற்ற பல வெற்றியாளர்களும் மேடையில் சிறப்பான முறையில் கௌரவிக்கப்பெற்றனர்.

கலை நிகழ்ச்சிகளும் அங்கு இடம்பெற்றன.














# "நேற்று முளைத்த காளானான நாமல் ராஜபக்ஸவிற்கு பல கருத்துக்களை குறிப்பிடும் துணிச்சலை கொடுத்தது சுமந்திரன்"

செல்வராஜா கஜேந்திரன் எம்.பி

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் சனிக்கிழமை (24) அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்ட பகுதிகளில்உள்ளவர்த்தகநிலையங்களுக்கு தெளிவூட்டும் துண்டு பிரசுரம் வழங்கும் செயற்பாட்டில் ஈடுபட்டவேளை ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் குறிப்பிட்டதாவது

75 வருடங்களாக தமிழருக்கு உரிமை வழங்க மாட்டோம் என்று பேரினவாதிகள் கூறி வருகின்றார்கள்.குறிப்பாக பேரினவாதிகள் சிங்கள மக்களுக்கு இவ்வாறாக கருத்துக்களை கூறி வருகின்றார்கள்.அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இது ஒரு பௌத்த நாடு. சிங்கள நாடு.இதை பேணிப் பாதுகாப்போம் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.அது மட்டுமன்றி வடகிழக்கில் 1000 பௌத்த விகாரை அமைப்பதாகவே கூறி வருகின்றனர்.சஜீத் பிரேமதாசவின் தேர்தல் விஞ்ஞாபனமும் அவ்வாறு தான் இருந்திருக்கின்றது.சஜீத் பிரேமதாச அவர்கள் புத்தசாசன அமைச்சராக இருந்த போது நீராவியடி பிள்ளையார் ஆலய முற்றத்தில் ஒரு பௌத்த பிக்குவின் சவம் எரிக்கப்பட்டது.இவ்விடயம் அமைச்சரின் ஆலோசனை வழிகாட்டலுடன் தான் நடைபெற்றது.இது தவிர அவரது காலத்தில் தான் யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதியில் சட்டவிரோத விகாரை கூட கட்டப்பட்டிருந்தது.

நாமல் ராஜபக்ஸ வினை பற்றி கூற தேவையில்லை.மோசமான இனவெறி கொண்ட ஒருவர்.இறுதிப் போரில் ஒன்று அரை இலட்சம் தமிழர்களை அழித்து ஒழிப்பதற்காக பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை திரட்டி இராணுவத்திற்கு கொடுத்திருந்த ஒரு கொலைவெறி பிடித்த குழு ஒன்றின் தலைமைச்சக்தியாக அவர் இருக்கின்றார்.அது மாத்திரமன்றி வடக்கு கிழக்கினை வழக்கு தாக்கல் செய்து பிரித்த இனவெறியர்கள் இவர்கள்.இவர்கள் எல்லோரது நிலைப்பாடுகளும் இவைகள் தான்.இதில் கோட்டபாய ராஜபக்ஸ விதிவிலக்கானவரல்ல. இதனால் தான் இவர்களிடம் தமிழருக்கு உரிமை கொடுக்க போகின்றோம் என கூறினால் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எழுதி உங்களின் சிங்கள மக்களிற்கு சொல்லுங்கள்.இந்த தோல்வியடைந்த ஒற்றையாட்சியினை ஒழிக்க போகின்றோம்.சமஸ்டியை கொண்டு வரப் போகின்றோம் என்பதை தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஊடாக வெளிப்படுத்தி வாருங்கள் என நாங்கள் கூறுவது நம்பிக்கைக்காக தான்.

இது தவிர இன்று நேற்று முளைத்த காளானாக இருக்கின்ற இந்த நாமல் ராஜபக்ஸ விற்கு சமீப காலமாக பல கருத்துக்களை குறிப்பிடும் துணிச்சலை கொடுத்தது சுமந்திரன் ,சம்பந்தன், அரியநேந்திரன் ,சிறிதரன், உட்பட இந்த தமிழரசு கட்சியின் வீட்டு சின்னத்தில் போட்டியிட்டு 2010 ஆண்டு 2015 , 2020 ஆண்டு வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் முழுப் பேரும் பொறுப்பேற்க வேண்டும்.விக்னேஸ்வரனும் முழுப்பொறுப்பினையும் ஏற்க வேண்டும். ஏனெனில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு குற்றவியல் விசாரணைகளை நடாத்துவதற்கான அதிகாரங்கள் இல்லை என்பது நன்றாக தெரிந்த பிற்பாடும் தொடர்ச்சியாக உள்ளக விசாரணைக்குள் பொறுப்பு கூறலை முடக்கி சர்வதே விசாரணை வேண்டாம்.இனப்படுகொலையாளிகளை பாதுகாப்பதற்காக மேற்கூறியவர்கள் ஒவ்வொருவரும் கூட்டாக செயற்பட்டு வந்தவர்கள்.குறிப்பாக இந்த இனப்படுகொலையாளி கோட்டபாய ராஜபக்ஸ 2019 ஆண்டு பதவியேற்ற பிற்பாடு ஜனாதிபதியாக இருக்கின்ற போது 2021 ஆண்டு மார்ச் மாதம் இலங்கை தொடர்பாக ஒரு தீர்மானம் வந்த நிலையில் அந்த சந்தர்ப்பத்தில் வந்து பொறுப்புக்கூறல் செயல்பாட்டை மனித உரிமை பேரவையில் இருந்து வெளியே எடுத்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு எடுத்து செல்ல வேண்டும் என முயற்சியை எங்கள் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் உட்பட எங்களது கட்சி முக்கியஸ்தர்கள் முன்னெடுக்கின்ற போது இவர்கள்(தமிழரசுக்கட்சியினர்) கடிதம் எழுதி ஜெனிவா மனித உரிமை பேரவையில் கொண்டு வரப்படவுள்ள விடயம் எந்த வடிவத்தில் ஏனும் நிறைவேற்றப்பட வேண்டும்.

ஏனெனில் இலங்கை தொடர்பில் ஜெனிவாவில் தீர்மானம் ஒன்று தேவை என்பதாகும்.இவ்வாறாக இவர்கள் கொடுத்த ஆதரவு தான் நாமல் ராஜபக்ஸ போன்றவர்களுக்கு இவ்வாறான திமிரினை கொடுத்திருக்கின்றது.அது மட்டுமன்றி நாமல் ராஜபக்ஸ சீன சார்பானவர் என்பதனால் ஊடகங்கள் அவரது கருத்துக்களை பெரிது படுத்துகின்றன.அது மட்டுமன்றி 2010 ஆண்டு தமிழரசு கட்சியினர் சரத் பொன்சேகாவிற்கு வாக்களிக்க சொன்னதை மறக்க முடியுமா. ஆகவே எமது மக்கள் இவ்வாறானவர்களை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.
1920 ஆண்டு முஸ்லீம்களிற்கு எதிரான படுகொலையில் ஈடுபட்டமைக்காக பிரித்தானியாவில் வழக்கு போடப்பட்டிருந்தது. அந்த வழக்கில் இலங்கையில் இருந்து சென்ற தமிழ் தலைவர்கள் வாதாடி அந்த சிங்கள தலைவர்களை மீட்டு கொண்டு வந்த போது அந்த நன்றி கடனுக்காக கொழும்பிற்கு வந்திறங்கிய இந்த தமிழ் தலைவர்களை குதிரை வண்டிலில் ஏற்றி குதிரைகளை கழற்றி விட்டு பண்டார நாயக்க உள்ளிட் சிங்கள தலைவர்கள் குதிரைகள் போன்று தோளில் வைத்து வண்டிகளை இழுத்து சென்றார்கள். அந்தளவிற்கு தமிழர்களுக்கு சிங்கள தலைவர்கள் கடமைப்பட்டு இருந்தார்கள். பயந்து கொண்டிருந்தார்கள்.ஆனால் இன்று ஒன்றரை இலட்சம் தமிழ் மக்களை கொன்று குவித்தவர்களை தமிழ் தலைவர்கள் என்று சொல்கின்ற அடிமைகள் ஜெனிவா வரை சென்று சர்வதேச விசாரணையின்றி மீட்டு இருக்கின்ற நிலையில் இன்று எம்மை சிங்கள மக்கள் துரத்தி துரத்தி அடிக்கின்றார்கள். எனவே எமது மக்கள் சிந்திக்க வேண்டும். எமது வாக்குகளை பெற இன்று பொது வேட்பாளர்களை நிறுத்தி இருக்கின்றார்களா? இவ்வாறானவர்கள் தான் அரசுடன் பேரம் பேசுவார்களா? என்பதை எமது மக்கள் நன்றாக சிந்திக்க வேண்டும் என செல்வராஜா கஜேந்திரன் குறிப்பிட்டார்.



# உணவே மருந்து
## வாழ்வில் இயற்க்கையையும் உணவையும் தேடி ஒரு பயணம்

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றின்" நம் உடம்பிற்கு மருந்து என எதுவும் தேவை இல்லை. எப்போதும் உண்ட உணவு வயிற்றில் போய் ஜீரணம் ஆகி வெளிவந்த பிறகு அடுத்த உணவு உண்டோமே ஆனால் உடலில் எந்த பாதிப்பும் இல்லை. மேல் கூறிய குறுலுக்கு ஏற்ப நம் வாழ்வில் நாம் இதனை கடைப்பிடிக்கின்றோமா என்றால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

உண்மையும் அது தான்.காரணம் இப்போது உள்ள இயந்திர மயமான வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் அவர்களுக்கு கொடுத்த நேரப்படி வேலை செய்யப்பட வேண்டி உள்ளது. அதனை வைத்து சாப்பிடும் நேரம், காலம், அனைத்தும் மாற்ற வேண்டி உள்ளது. இரவு நேர வேலைக்கு செல்பவர்கள் நாம் நினைக்கும் படியாக சாப்பிடக்கூடிய அல்லது பசித்து சாப்பிடக்கூடிய நிலையில் இல்லை. பசித்தால் எத்தனையோ குளிர்பானங்களும் துரித உணவுகளும் எடுத்துக் கொண்டு அந்த நேரம் பசியாற்றிக்கொண்டு பின் தன் உடம்பை தானே கெடுத்துக் கொள்வது கூட தெரியாமல் சாப்பிட்டுவிட்டு பின் விளைவுகளை நோக்கி நோய் வந்த பின் வருந்தி என்ன பயன். "வருமுன் காப்பவன் தான் அறிவாளி" ஆகையால் நமக்கு நாமே மருத்துவராகவும் நம் உடல்நிலைக்கு ஏற்ற உணவுகளை இனியாவது சரிசெய்து,அதனை கடைபிடித்து வாழ பழகிக்கொள்ள வேண்டும்.

எனக்கு நானே முதலில் என்னென்ன விஷயங்கள் நமக்கு கை கொடுக்கும் என தேடத் தொடங்கினேன். முதலில் ஆங்கில மருந்துகள் எடுத்துக் கொண்டாலும் உணவு முறையில் மிகப்பெரிய புரட்சி என்றே சொல்ல வேண்டும். அனைத்தையும் மாற்றினேன்.

முதலில் உப்பு சக்கரை இயற்கை முறையில் உள்ள இந்து உப்பு மற்றும் நாட்டு சர்க்கரை, பனங்கருப்பட்டி என்று மாற்றம் செய்ய ஆரம்பித்து, பின் அரிசி,மளிகை பொருட்கள் முக்கியமாக தேங்காய் எண்ணெய் , நல்லெண்ணெய், கடலை எண்ணெய் காய்கறிகள், பழங்கள் என அடுத்தடுத்து ஒவ்வொன்றாக மாற்றத் தொடங்கினேன். இறுதியாக அசைவ உணவுமே இயற்கையில் கிடைக்கும் நாட்டு கோழி முட்டைகளும் இயற்கை உணவை உண்டு விற்கபடும் வெள்ளாடுகளும் குறிப்பாக கோழிகளுக்கும் கொடுக்கும் உணவுகளும் இயற்க்கை தானியங்கள் கொடுத்து வளர்க்கப்பட்டு பின் கிடைக்கும் அசைவ உணவுகளையும் தேடி எங்கெல்லாம் கிடைக்கும் என்று வாங்கி சமைக்க ஆரம்பித்தேன். மற்றும் சிறுதானியங்கள், பாரம்பரிய அரிசிகள் என என் தேடல் நீண்டு கொண்டே சென்றது முதல் மாதம் சிறிது மாற்றம் தெரிந்தது. அதற்கு அடுத்த நாளிலிருந்து ஐந்து மாதத்திற்குள் முழுமையாக என்றால் அது அவ்வளவு முழுமையாக மாற்றங்கள் உடம்பில் தெரிய ஆரம்பித்து முழுவதுமாக குணமாகியது.

அனைவருக்கும் எனக்கு தெரிந்ததை சொல்லிக் கொடுத்து அவர்களின் வாழ்க்கையிலும் மாற்றத்தை கொண்டு வந்துள்ளேன். பிறகு நாம் ஏன் இத்தனை மக்களுக்கு ஒரு விழிப்புணர்வு கொடுக்க கூடாது என எண்ணி என் வாழ்வில் நடந்தவைகளை எழுதத் தொடங்கினேன்.

என்னை ஆரம்பத்தில் நிறைய பேர் வேண்டாத வேலை என்று சொன்னவர்கள் எல்லாம் பணம் தேவையில்லாமல் இரட்டிப்பாக செலவு செய்து பொருட்களை வாங்கிக் கொண்டிருக்கின்றாயே என்று கூறியவர்கள் அனைவரும் என்னிடம் வந்து பேசும்போது நான் கூறுவது ஒன்றுதான் "வைத்தியனுக்கு கொடுப்பதை வாணியனுக்கு கொடு" என்று நம் முன்னோர்கள் சொல்லி வைத்துள்ளார்கள்.

அதுபோல நாமும் முயற்சித்து பார்ப்போமே என்று கூறியவுடன் அவர்களும் கொஞ்சம் கொஞ்சமாக இயற்கை உணவினை உண்டு அதன் பயன்களும் பலன்களும் தெரிந்த பின் அனைத்து மக்களும் ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என நிறைய நண்பர்கள் கூறியவுடன் அதனால் வந்த ஈடுபாடல் எனக்கு தெரிந்ததை மக்களிடம் பகிர்ந்து கொள்கிறேன். இனி பாரம்பரிய அரிசிகள் ; சிறுதானியங்கள் அதன் பயன்கள் அதில் உள்ள சத்துக்கள் அதனை எப்படி உட்கொண்டால் நாம் பயன்பெறலாம் என வரும் தொடர்களில் பகிர உள்ளேன். நன்றி





நம்மை நாம் தான் காப்பாற்றி கொள்ள வேண்டும். எதனை சாப்பிட்டால் உடல் ஆரோக்கியமாக பார்த்து கொள்ளலாம் என நாம் இளைய தலைமுறையினரும் சரி குழந்தைகளும் சரி சொல்லி கொடுக்க வேண்டும். நம்மை பார்த்து சிறிது சிறிதாக அவர்களும் தங்களை பழகிக்கொள்வார்கள். ஆரம்பத்தில் சிறிது கஷ்டமாகத்தான் இருக்கும். ஏனெனில் வெளிநாட்டு உணவு மோகத்தில் சிக்கி உணவுகளை தன் விருப்பம் போல் உண்டவர்கள் 30 வயதிலேயே பல நோய்களுக்கு ஆளாகி பின் விளைவுகளை அனுபவித்துக் கொண்டிருப்பதை பார்த்துக்கொண்டு நாமும் நம் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டுதான் இருக்கின்றோம்.

உதாரணமாக வெளியில் உள்ளவர்களை சொல்வதை விட நான் ஏன் இந்த உணவே மருந்து என்னும் இக்கட்டுரையை எழுத காரணம் என்னவென்றால் கடந்த 2006 ஆம் ஆண்டு என் கணவருக்கு பணி வேலை மாறுதல் காரணமாக வெளிநாடு செல்ல வேண்டி இருந்தது. முதலில் ஆறு மாதம் என்று சொன்னதால் ஒப்புக்கொண்டு சென்றார்கள். பின் ஒரு வருடம் அடுத்தடுத்த வருடங்கள் என 5 வருடங்கள் அங்கு அவர் பணி தொடரவே அங்கு இருக்க வேண்டி இருந்தது. ஆனால் அங்குள்ள உணவுகளும் இயற்கை சூழலும் அவருக்கு ஒத்துக்கொள்ளவில்லை. அலர்ஜி என்ற ரூபத்தில் உடலில் எங்கு பார்த்தாலும் அம்மை போன்று உடலில் அனைத்து இடங்களிலும் உணவு ஒத்துக் கொள்ளாததால் மிகவும் சிரம பட வேண்டி இருந்தது. வேலைக்கு கூட நிம்மதியாக சென்று வேலை செய்ய முடிய வில்லை. பின் விடுப்பு எடுத்து நம் நாட்டிற்கு வந்து இங்குள்ள அலோபதி மருந்துகளாவது கைகொடுக்கும் என்று பார்த்தால் அதிலும் முழுமையான தீர்வு என்பது இல்லை. மருந்துகளின் மூட்டைகள் தான் கிலோ கணக்கில் பையில் நிரம்பி வழிந்தன. இறுதியில் பழங்காலத்தில் என்ன பத்திய முறை உணவுகள் நம் உடம்புக்கு ஏற்று கொள்ளும் என தெரிந்து அது போல் உண்ண மாற்றம் செய்யலாம் என என் தேடல் தொடங்கியது.

இறைவன் அருளாலும், மற்றும் நண்பர்கள் உதவியாலும் நான் இதைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்று சில வகுப்புகளுக்கும் சென்றேன். பின்பு தெரிந்து கொண்டு பல ஆயிரக்கணக்கான மாத்திரைகளை உட்கொண்டு செய்ய முடியாததை நம்முடைய இயற்கை உணவுகள் மூலம் மாற்றினேன். அனைவருக்கும் ஆச்சர்யம் மற்றும் சந்தோஷம். நமக்கே முதலில் ஆராய்ச்சி போல செய்து இதில் 100% சரியாகும் போது நம்மைப் போல பல ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான மக்கள் இதேபோல பல வேதனைகளுடனும் உடல் உபாதைகளுடனும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.இயற்கை உணவை வாழ்நாள் முழுவதும் எடுத்துக் கொள்ள நாம் ஏன் ஒரு தீக்குச்சி பொறியாக இருக்கக் கூடாது என தோன்றி இக்கட்டுரைகளை எழுத தொடங்கினேன். என்னதான் இயற்கை உணவுகள், பழங்கள், காய்கறிகள், தானியங்கள் என இருந்தாலும் சிலருக்கு சில உணவுகள் ஒத்துக்கொள்வதில்லை.

அதுபோல உடலுக்கு ஒத்துக் கொள்ளததை பார்த்து பார்த்து அவைகள் அனைத்தும் ஒதுக்கியபின் அனைத்து சரியான பின் சிறிது சிறிதாக சேர்க்க ஆரம்பித்தேன். உதாரணமாக கோதுமை, நிலக்கடலை இவை இரண்டும் ஒத்துக் கொள்ளாது. அதனை உட்கொண்ட ஒரு மணி நேரத்தில் அலர்ஜி ஆகிவிடும். பின் யோசித்து அதனையும் இயற்கையை முறையில் எங்கு கிடைக்கும் அங்கு சென்று அதனை பயன்படுத்திய பிறகு அலர்ஜி என்பது இல்லை. இயற்கை முறையில் கிடைக்கும் கடைகளில் வாங்கி சமைத்த பின் ஒன்றுமே செய்யவில்லை. இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில் அனைத்து உணவுகளிலும் ரசாயணம் என்னும் நஞ்சு கலந்தால் ஒரு சிலருக்கு காலம் தாழ்ந்து எதிர் விளைவுகளை உண்டாக்கும். சிலருக்கு உடனடியாக காண்பித்துக் கொடுக்கும். அதுபோல நாம் உணவினை தேடி இயற்கை முறையில் உணவுகளை வாங்கி நமக்கு வைத்துக் கொள்ள வேண்டும்.

அதனை நமக்கு பிடித்தபடி அதற்கு ஏற்றார் போல் சமைத்து உட்கொள்ள வேண்டும். இந்த செயற்கை உணவு சங்கிலி போராட்டத்திலிருந்து நான் தெரிந்து கொண்டு வெளியேறியது போல என்னைச் சார்ந்த உடன் பிறந்தவர்கள், நண்பர்கள், உறவினர்கள் என

ஹெல்த் டிப்ஸ் by



ஜோ.பா. ராஜஸ்ரீ.

# தமது நீதிக்காகப் போராடும் எமது தமிழ்த் தாய்மாரை அச்சுறுத்தி பணியவைக்கும் முயற்சியில் காணாமல் போனோர் அலுவலகம்

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களைக் கண்டுபிடிக்கக் கோரி தொடர்ந்து போராடிவரும் உறவினர்களின் ஒரு உறவினரையேனும் கண்டுபிடிக்கத் தவறியுள்ள காணாமல் போனோர் அலுவலகம் (ஓஎம்பி) உண்மை வெளிவருவதைத் தடுக்கும் முயற்சியால் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது.

தமது நீதிக்காகப் போராடும் தமிழ்த் தாய்மாரை அச்சுறுத்தி இறப்புச் சான்றிதழ் வழங்குவதற்கு முயற்சிக்கும் காணாமல் போனோர் அலுவலகம், மனித எலும்புகள் மீட்கப்பட்ட கொக்குத்தொடுவாய் புதைகுழியை மூடுவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி 18-08-2024 அன்று முல்லைத்தீவில் ஊடகவியலாளர்கள் சந்திப்பை நடத்தி குறிப்பிட்டுள்ளார்.

காணாமல் போனோர் அலுவலகம் அதிகாரத்தை பயன்படுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை அச்சுறுத்தி வருவதாக மரியசுரேஷ் ஈஸ்வரி அன்றைய தினம் மேலும் குற்றம் சுமத்தியுள்ளார்.

"வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் எவ்வளவு பிரச்சினைகளை சந்தித்தபோதும் எங்களுக்கு சர்வதேச விசாரணையே தேவையென நாங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றபோதிலும் அவர்கள் உள்நாட்டு பொறிமுறைக்குள் கொண்டுவந்து ஓஎம்பியை பலப்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள். அந்த பலத்தை பயன்படுத்தி இன்றும் எமது மக்களை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை அச்சுறுத்தி விசாரைணைக்கு வரச்சொல்லி இரண்டு இலட்ச ரூபாய் பணம் தருவதாகக் கூறி அவர்களின் கையெழுத்துகளை பெற்று மரண சான்றிதழை தருவதற்கான ஆயத்தங்களை செய்துகொண்டிருக்கின்றார்கள்."கடந்த 15ஆம் திகதி வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களிடம் காணாமல் போனோர் அலுவலகம் கையொப்பம் பெற்ற விடயத்தையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படும் எனக் கூறி, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சான்றிதழைப் பெற்றுக்கொள்ளவும், அரசாங்கம் முன்வைத்துள்ள இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ளவும் தமது உறவுகளை இழந்த தமிழ்த் தாய்மார்கள் பகிரங்கமாக மறுத்து வருகின்றனர்.



போரினால் பாதிக்கப்பட்ட வன்னியின் பல பகுதிகளில் மனித உடல் உறுப்புகள் கண்டெடுக்கப்பட்டமை தொடர்பில் அப்பகுதி மக்கள் ஊடாக தகவல்கள் தெரிவிக்கப்பட்டு வருவதாக தவிசாளர் மரியசுரேஷ் ஈஸ்வரி வாரயிறுதியில் மேலும் சுட்டிக்காட்டியிருந்தார்.

"மனித எச்சங்கள் பல பிரதேசங்களில் இருப்பதாக அந்த பிரதேச மக்கள் எங்களுக்கு அறிவித்துக்கொண்டிருக்கின்றார்கள். இந்த வகையில் எமது ஆதரவு இன்றி மனித புதைகுழிகளை மூடி, ஓஎம்பி அலுவலகத்தால் பெருந்தொகையான நிதியை திரட்டி, அந்த அலுவலகத்தின் ஊடாக பெரும் நம்பிக்கையை சர்வதேசத்திற்கும் ஏற்படுத்தி, அதில் நாங்கள் தீவிரமாக பணியாற்றுகின்றோம் எனச் சொல்லி எங்களை நசுக்க ஓஎம்பி அலுவலகம் செயற்படுகிறது."

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் இருந்து 52 பேரின் எலும்புக்கூடுகள் ஒரு வருடத்திற்கும் மேலாக தோண்டி எடுக்கப்பட்ட பின்னர் அந்தப் பணிகள், 15 ஜூலை 2024 அன்று நிறைவு பெற்றது. வெகுஜன புதைகுழியை மூடும் நடவடிக்கைக்கு கடும் கண்டனம் வெளியிட்ட மரியசுரேஷ் ஈஸ்வரி, தனது கண்டனத்திற்கான காரணங்களையும் விளக்கியிருந்தார்.

"அந்த இடத்தில் புதைகுழி மூடப்பட்டமையை வன்மையாக கண்டிக்கின்றோம். அந்த இடத்தை முழுமையாக அடையாளம் தெரியாமல் அழிப்பதை கண்டிக்கின்றோம். இன்னும் பல மனித எச்சங்கள் அதில் உள்ளதாக நாங்கள் அறிந்துள்ளோம். அயல் பிரதேசத்திலே இன்னும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. முழு ஆய்வு செய்து எமக்கான நீதி பெற்றுத்தர சர்வதேசம் முன்வர வேண்டும். அதில் என்ன நடந்தது என்பதை அறிய காத்திருந்தோம் இன்று நாம் ஏமாற்றமடைந்துள்ளோம்."

புதைகுழியின் அகழ்வுப் பணிகளை அவதானித்த சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன், ஓகஸ்ட் 8ஆம் திகதி நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில், "இந்த மனித புதைகுழி இருந்த இடத்தை பொது மக்களிடம் கையளிப்பது தொடர்பில் அடுத்து தவணை விசாரணையில் தெரிவிப்பதாக காணாமல் போனோர் அலுவலகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது," எனக் குறிப்பிட்டிருந்தார்.

மூடப்பட்ட புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எச்சங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுடையதா? என்பதை கண்டறிய ஆய்வுகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் சட்டத்தரணி மகேஷ் கட்டுலந்த பிரதேச ஊடகவியலாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

2023 ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில், கொக்குத்தொடுவாய் மகாவித்தியாலயத்தில் இருந்து கொக்கிளாய் நோக்கி சுமார் 200 மீற்றர் தொலைவில், நீர் வழங்கல் திணைக்கள ஊழியர்கள் நீர் குழாய்களை அமைப்பதற்காக நிலத்தை தோண்டிக் கொண்டிருந்த போது, தற்செயலாக மனித உடல் பாகங்கள் மற்றும் ஆடைத் துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

# யாழ்ப்பாணம் தந்தை செல்வா நினைவிடத்தில் அஞ்சலியுடன் தமிழ் பொதுவேட்பாளரின் பரப்புரைப் பயணம் ஆரம்பம்

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் சார்பில் பா.அரியநேத்திரன் பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார். அவரை அறிமுகம் செய்து ஆதரித்து நடைபெறவுள்ள முதலாவது பொதுக் கூட்டம் 18-08-2024 அன்று ஞாயிற்றுக்கிழமை முள்ளியவளை செந்தமிழ் விளையாட் டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.





இதை முன்னிட்டு பா.அரியநேத்திரன் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவிடத்தில் அன்று காலை அஞ்சலி செலுத்தித் தனது பரப்புரைப் பயணத்தை ஆரம்பித்துள்ளார்.





பொலிகண்டி முதல் பொத்துவில் வரைக்கும் என்று பெயரிடப்பட்டுள்ள இப் பிரச்சாரப் பயணத்தின் தொடக்க நிகழ்ச்சியாகவே தந்தை செல்வா நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து பா.அரியநேத்திரன் ஆலயங்களுக்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டதுடன் மதத் தலைவர்களைச் சந்தித்து அவர்களிடம் ஆசீர்வாதமும் பெற்றார்.



இந்நிகழ்ச்சிகளில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ .ஐங்கரநேசன், தமிழ் மக்கள் பொதுச் சபையின் பிரதிநிதிகள் பேராசிரியர் கே . ரி . கணேசலிங்கம், த.வசந்தராஜா,அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தார்கள்


VIBRANT HOSPITALITY GROUP
ONE OF CANADA'S FASTEST GROWING
HOSPITALITY AND DEVELOPMENT GROUPS
OVER
25 Years
IN THE HOSPITALITY
INDUSTRY
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES
LOCAL: 905 769 1509
TOLL FREE: 1 888 674 7770
VIBRANTHOSPITALITYGROUP.COM


KT GROUP
An Integrated Facilities Management Services Provider
Providing eco-friendly commercial cleaning services in Ontario to promote sustainability and maintain a spotless environment.
Offering top-tier security solutions to ensure the safety and protection of businesses and properties throughout Ontario.
Delivering comprehensive employment services to connect job seekers with employers and support workforce development.
Specializing in professional restoration services to repair and rejuvenate properties after damage from water, fire, mold, or other disasters.
+1-866-686-9660
2283 Argentia Rd., Unit 16, Mississauga, ON, Canada, L5N 5Z2


SPECTRONX TECHNOLOGIES
IT Services & Solutions
Empowering Brands Digitally
Web Development
WebApp Development
Search Engine Optimization
Social Media Management
Branding
Data Analytics
Digital Marketing
+1-437-213-9525
info@spectronx.ca

# Ontario's Premier graced Hon. Raymond Cho's Annual Get together in Scarborough

# ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் கலந்து சிறப்பித்த அமைச்சர் றெமண்ட் சோ அவர்களின் ஒன்றுகூடல்

கடந்த சனிக்கிழமை ஆகஸ்ட் 24ம் திகதி மாலை ஸ்காபுறோவில் நடைபெற்ற கௌரவ ஒன்றாரியோ மாகாண அமைச்சரும் ஸ்காபுறோ வடக்கு மாகாணப் பாராளுமன்ற உறுப்பினருமான றேமண்ட் சோ அவர்கள் நடத்திய வருடாந்த ஒன்றுகூடலின் சிறப்பு விருந்தினராகவும் பேச்சாளராகவும் ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக்போர்ட் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

அங்கு கலந்து கொண்ட ஏனைய மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களில் தமிழ் பேசும் மாகாண உறுப்பினர் லோகன் கணபதி மற்றும் அஜின்கோர்ட் தொகுதியின் மாகாண உறுப்பினர் அரிஸ் பாபிகியன் ஆகியோரும் அடங்குவர்.




அத்துடன் அமைச்சர் றேமண்ட் சோ அவர்களால் அழைக்கப்பெற்றிருந்த கொன்சவேர்ட்டிவ் கட்சியின்



உறுப்பினர் டீபக் டெல்ஜேரா மற்றும் அவரது பாரியார் மற்றும் 'தேசம்' பத்திரிகையின் விளம்பர மற்றும் விநியோக முகாமையாளர் சங்கர் சிவநாதன் மற்றும் அவரது பாரியார் ஆகியோரும் அங்கு வரவேற்கப்பெற்றார்கள்.

# இலங்கையின் சனாதிபதித் தேர்தலுக்கு வேட்புமனுத்தாக்கல் செய்தோர் பட்டியல் வெளியாகியுள்ளது. நமது வேட்பாளர் அரியநேத்திரனும் ஒருவர்.

இலங்கையின் சனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள நிலையில் கடந்த வியாழக்கிழமை 11.30 மணிவரை வேட்புமனுத்தாக்கல் நடைபெற்றது. இதில் 39 வேட்பாளர்கள் தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பகின்றது
ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வேட்புமனுக்கள், 15ம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சுயேட்சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச,
தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார,

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் போட்டியிடும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ

பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா

முன்னாள் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ,

இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜானக ரத்நாயக்க மற்றும் பொதுத் தமிழ் வேட்பாளர் அரியநேத்திரன் ஆகியோர் தங்களது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தார்கள்.

மௌபிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுவை முதலாவதாகக் கையளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் செய்தவர்களின் ஆவணங்களை பரிசீலிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.
இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக 40 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



# சந்நிதியான் ஆச்சிரமம் மதங்களைக் கடந்து உதவிகளை வழங்குகிறது –

## ஆச்சிரம முதல்வர் மோகன் சுவாமி தெரிவிப்பு




செல்வச் சந்நிதியான் மதங்களைக் கடந்து இலங்கையின் பல பாகங்களிலும் கஷ்டப்படுபவர்களுக்கு உதவிகளை வழங்கி வருவதாக ஆச்சிரம முதல்வர் மோகன் சுவாமிகள் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து அன்னதான பணியில் இணைந்து கொண்ட நான் எனது குருநாதரின் வழிநடத்தலில் சந்நிதியான ஆச்சிரமத்தை வழிநடத்தி வருகிறேன்.

இங்கு நான் முதலாளி அல்ல. முருகன் தான் முதலாளி அள்ளித் தருகிறான் ஏழைகளுக்கு இல்லை என்று வருபவர்களுக்கு அவன் அருளால் அள்ளி வழங்கி வருகிறோம்.

யுத்த காலத்தில் துவிச் சக்கர வண்டி மூலம் நெல்லு பெற்று உரலில் போட்டு கோது நீக்கி முருகனை நாடிவரும் அடியவர்களுக்கு உணவு சமைத்து வழங்கினோம்.

நாம் யாரிடமும் அன்னதானத்துக்கு பணம் தாருங்கள் அல்லது எங்கள் ஆசிரமத்துக்கு உதவி செய்யுங்கள் என கேட்டது கிடையாது.

ஆனாலும் எமது ஆரம்ப காலத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய நான்கு அல்லது ஐந்து பேரிடம் உதவிகளைப் பெற்று ஆசிரமத்தை நடத்தி வந்தோம்.

இன்று மரம் பழுத்து பழமாக உள்ள நிலையில் பலரும் உதவி செய்கிறார்கள் ஆனாலும் எம்மை முன்பு வளர்த்து விட்டவர்களை நான் ஆத்திரமத்தில் இருப்பவர்களுக்கு கூறியிருக்கிறேன் அவர்களை எக்காலத்திலும் நான் நன்றி உடையவர்களாக இருக்க வேண்டும் என்று.

முருகனின் ஆச்சிரமத்தில் தினமும் 60க்கும் மேற்பட்ட முதியவர்களுக்கு மூன்று நேர உணவு தேநீர் வழங்கப்பட்டு வருகிறது.

அதுமட்டுமல்லாது வாரத்தில் ஏழு நாட்களும் முருகனை நாடிவரும் அடியவர்களுக்கு இல்லை என்று கூறாமல் உணவு வழங்கி வருகிறோம்.

எமது ஆசிரமத்தால் இலங்கையில் உள்ள பல பாகங்களிலும் வறியப்பட்ட மக்களுக்கு அவர்களது பிரதேசம் சென்று உணவுப் பொருட்கள் மருத்துவ உபகரணங்கள் பாடசாலை மாணவர்களுக்கான உதவி திட்டங்கள் என பல்வேறு அறப்பணிகளை ஆற்றி வருகிறோம்.

கொரோனா இடர் காலப்பகுதியில் பல வைத்திய சாலைகளுக்கு மருந்து பொருட்களை வழங்கியதோடு முடக்கப்பட்ட பிரதேசங்களுக்கு சமைத்த உணவுகளையும் வழங்கினோம்.

சந்நதியான் ஆச்சிரமம் மதங்களைக் கடந்து அறப்பணிகளை ஆற்றி வருகிறது.

எமது ஆசிரமத்தில் முஸ்லிம் கிறிஸ்தவ பிள்ளைகள் உணவருந்துகிறார்கள் அவர்களின் கல்விக்கு தேவையான உதவி திட்டங்களை வழங்கி வருகிறோம்.

கஷ்டப்பட்ட குடும்பங்களை சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதம் தலா 6 ஆயிரம் ரூபா வீதம் வழங்கி வருகிறோம்.

கஷ்டப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த வெளி மவட்டத்திலிருந்து வருகை தந்து யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள பெண் மாணவிகள் தங்குடத்துக்காக அதிக அளவு நிதியை செலவழிக்கிறார்கள்.

அவர்களது குறையை தீர்க்கும் முகமாக புலம்பெயர் நாட்டில் வசிக்கும் குடும்பம் ஒன்று காணியை அன்பளிப்பாக தந்துள்ள நிலையில் மாணவிகள் தங்கக்கூடிய தங்குமிட விடுதியை அமைப்பதற்கு உத்தேசித்துள்ளோம் .

பண உதவிக்காக எம்மைப் பலர் நாடி வருகிறார்கள் அவர்கள் வரும்போது பணம் இருக்காது உணவு வேண்டுமானால் இல்லை என்று கூறாமல் கொடுத்து விடுவோம் .

ஆனால் அவர்கள் இங்கு வந்து குறைகளை கூறும் போது முருகனின் திருவருள் மறுநாள் யாரோ ஒருவர் எமது வங்கி கணக்கிற்கு பணத்தை வழங்கு இருப்பார் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவர்களை அழைத்து பண உதவிகளை வழங்குவோம்.


எமது கையில் ஒன்றுமில்லை எல்லாம் சந்நிதியான் நாம் யாரிடமும் உதவி செய்யுங்கள் என்று தொலைபேசியிலோ அல்லது கடிதத்திலோ கேட்பது கிடையாது அவ்வாறே எவ்வளவு பணம் வருகிறது செலவு எவ்வளவு என்பதும் கணக்கு பார்ப்பது கிடையாது.

நான் இருபது வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாணத்தில் உள்ள எந்தவொரு ஆலயத்தையும் வழிபடுவதற்காகச் சென்றது கிடையாது நிகழ்வுகளுக்கு சென்றதும் இல்லை.

வீதியில் போகும்போது ஆலயங்களை வீதியில் நின்றபடி வணங்கிச் செல்வது வழமை.

எனக்கு தெரியாமல் எனது 75 ஆவது பிறந்தநாள் நிகழ்வை கொண்டாட வேண்டும் என எனது அச்சிரம அடியவர்கள் ஊடகவியலாளர்களையும் அழைத்து விட்டார்கள்.

ஆகவே நீங்கள் கேள்விகளை கேட்டீர்கள் என் மனதில் பட்டதை கூறி இருக்கிறேன் முருகனின் அற்புதம் தருகிறான் இல்லை என்று வருபவர்களுக்கு வழங்குகிறோம் எமது அறப்பணிகள் இன மத மொழி கடந்து தொடர்ந்து இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார்.



# "தமிழ் மக்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சனைகளை சர்வதேசத்துக்கு சொல்வதற்கு நாம் எடுக்கும் முயற்சிகள் பல.

## அதில் பொது வேட்பாளரும் ஒரு பொறிமுறையாகும்

பேச்சாளர் ரெலோ
கு. சுரேந்திரன் அறிவிப்பு

தமிழ் மக்கள் தொடர்ந்தும் எதிர்கொண்டு வரும் பிரச்சனைகளையும் சர்வதேசத்துக்கு சொல்வதற்கு நாங்கள் பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளோம். அதில் பொது வேட்பாளரும் ஒரு பொறிமுறையாக கையாளப்படுகிறது. நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் பரபரப்புக்களில் தமிழ் மக்களின் பிரதான விடயமான ஐ.நா அமர்வுகளைப் புறந்தள்ளி விட வேண்டாம் என ரெலோ கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் ஐ.நா மனித உரிமைப் பேரவையின் 57 ஆவது அமர்வு நடைபெற இருக்கும் இவ்வேளையில் ஐ.நா மனித உரிமை உயர்ஸ்தானிகரின் அறிக்கை மனித உரிமைப் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எமது தரப்பில் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு சமர்ப்பிப்பதற்கான அறிக்கையின் மாதிரி வடிவம் அனைத்து கட்சி தலைவர்களுக்கும் பல நாட்களுக்கு முன்னரே எம்மால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் உயர்ஸ்தானிகராலய அலுவலர்களுடன் இணையவழியில் நடைபெற்ற சந்திப்பில் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் பாராளுமன்ற உறுப்பினர், குருசுவாமி சுரேந்திரன் பேச்சாளர் ரெலோ, மற்றும் பிரான்ஸிலிருந்து ஏற்பாட்டாளர் மகேந்திரன் குலராஜ் ஆகியோர் கலந்துகொண்டு இருந்தனர்.

சில காரணங்களினால் மற்ற கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ள முடியவில்லை. இருப்பினும் சந்திப்பில் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் உட்பட கலந்து கொண்டவர்கள் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் விடயங்களின் தற்போதைய நிலை, தொடர்ந்தும் மீறப்பட்டு வரும் மனித உரிமை விடயங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தனர்.

மனித உரிமைப் பேரவைக்கு சமர்பிக்க தயாராகி இருந்த ஐ.நா மனித உரிமை உயர்ஸ்தானிகரின் அறிக்கையும் அதில் கலந்துரையாடப்பட்டிருந்தது. எதிர்வரும் மனித உரிமைப் பேரவையின் அமர்வுக்கு முதலாக எமது தரப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்படுவது மிகவும் அவசியமாகும்.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்தின் மெத்தனப் போக்கும் அதனால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் எதிர்கொண்டு வரும் பிரச்சனைகளையும் சர்வதேசத்துக்கு சொல்வதற்கு நாங்கள் பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளோம். அதில் பொது வேட்பாளரும் ஒரு பொறிமுறையாக கையாளப்படுகிறது.

இந்த நேரத்தில் மனித உரிமை பேரவையின் 57 ஆவது கூட்டத் தொடர் எமது பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதற்கான மிகப் பிரதான தளமாக அமைந்திருக்கிறது. சர்வதேச நாடுகள் பொறுப்புக் கூறல் மற்றுமை நல்லிணக்கம் சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கின்ற மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடரை ஜனாதிபதி தேர்தல் விடையங்களினால் நாம் மறந்து விடல் ஆகாது.

யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனிதத்துக்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றோடு எமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியைப் பெற்றுக்கொள்ள ஐ.நாப் பொறிமுறை மற்றும் மனித உரிமை பேரவையின் நடவடிக்கைகளில் மனந்தளராது தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டு காத்திருக்கும் எமது மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற எமது காத்திரமான தொடர் நடவடிக்கைகள் அவசியமாகும்.

மிகக் கடினமான தேர்தல் விடயங்களை கையாளும் பொழுதிலும் எமது இன நலன் சார்ந்த பிரதானமான ஐநா மனித உரிமைப் பேரவை கூட்டத் தொடரில் எமது மக்கள் சார்பாக அறிக்கைகள் இடம் பெறுவது தேர்தல் நலன்களையும் தாண்டி முக்கியமானதாகும்.

ஆகவே அனைத்துத் தமிழ்த் தேசியப் பரப்பிலும் பணியாற்றிக் கொண்டிருக்கும் அரசியல் கட்சிகள் பொது அமைப்புகள் ஆகியோரை இந்த பேரவை கூட்டத் தொடருக்கான அறிக்கை சமர்ப்பிக்கும் எமது முயற்சியில் கைகோர்க்குமாறு வினயமாக வேண்டுகிறோம்.

கு. சுரேந்திரன்
பேச்சாளர் ரெலோ
(தெரிவித்தவர்)



தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
TELO

# “கொக்குத்தொடுவாய் புதைகுழியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் யாருடையதாக இருந்தாலும் அவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்”

## முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி தெரிவிப்பு

52 பேரின் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டதையடுத்து நீதிமன்ற உத்தரவின் பேரில் மூடப்பட்ட கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி தொடர்பில் உண்மையை வெளிப்படுத்தி நீதி வழங்குமாறு கோரி போரினால் பாதிக்கப்பட்டத் தமிழர்களின் தாய்மார் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

2024ஆம் ஆண்டு ஜூலை 15ஆம் திகதி, அகழ்வுப் பணிகள் நிறைவுக்கு கொண்டுவரப்பட்ட முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் வெகுஜன மயானத்திற்கு அருகில் நேற்று ஒன்று கூடிய வடக்கின் ஐந்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், தமிழ் மக்கள் பிரதிநிதி ஒருவருடன் இணைந்து வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து மனித புதைகுழிகள் தொடர்பிலும் சர்வதேச விசாரணை அவசியமென, ஒரே குரலில் வலியுறுத்தினர்.




வடக்கில் கண்டுபிடிக்கப்பட்ட நான்கு மனித புதை குழிகளுக்கும் நீதி வழங்கப்படவில்லை எனவும், கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் யாருடையதாக இருந்தாலும் அவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டுமெனவும் ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கிய முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி தெரிவித்தார்.

“கொக்குத்தொடுவாய் போன்று நான்கு புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நான்கு புதைகுழிகள் குறித்தும் சாட்சிகள் இருக்கின்றபோதிலும் எதுவும் நடக்கவில்லை. அவசரமாக வழங்கப்பட்ட தீர்ப்பை ஏற்க முடியாது. எங்களது பெறுமதியான உறவுகள், அது எமது உறவுகளாக இருந்தாலும் சரி, போராளிகளாக இருந்தாலும் சரி புதைக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்கப்பெற வேண்டும்.”

இலங்கையில் நீண்டகாலமாக தமது அன்புக்குரியவர்களுக்கு நீதி கோரி போராடி வரும் தமிழ் தாய்மார்களை அச்சுறுத்தி மரண சான்றிதழை வழங்க முற்படும் காணாமல் போனோர் அலுவலகம் எவ்வாறு மனித புதைகுழிகளுக்கு நீதி வழங்கும் என அவர் மேலும் கேள்வி எழுப்பினார்.

“காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு எதிராக செயற்படும் ஓஎம்பி அலுவலகம் புதைகுழிக்கு எவ்வாறு நீதியை பெற்றுத்தரும் என்பது எமது கேள்வி. எனினும் சர்வதேசம் ஏன் ஓஎம்பியை மதித்து அங்கீகரிக்கிறது எனத் தெரியவில்லை.”

மூடப்பட்ட புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எச்சங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுடையதா? என்பதை கண்டறிய ஆய்வுகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் சட்டத்தரணி மகேஷ் கட்டுலந்த பிரதேச ஊடகவியலாளர்களிடம் இதற்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

“கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு சர்வதேச விசாரணை வேண்டும், மன்னார் மனித புதைகுழிக்கு சர்வதேச விசாரணை வேண்டும், திருக்கேதீச்சரம் மனித புதைகுழிக்கு சர்வதேச விசாரணை வேண்டும், யாழ்ப்பாணம் மனித புதைகுழிக்கு சர்வதேச விசாரணை வேண்டும், கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு நீதி வேண்டும் - இராணுவம் பொறுப்புக்கூற வேண்டும்” போன்ற கோசங்கள் எழுப்பப்பட்ட இந்த போராட்டத்தில், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களான தமிழ்த் தாய்மார்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் பொது மக்கள் பங்கேற்றனர்.

மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட ஆடைகளை அடிப்படையாகக் கொண்டு எலும்புக்கூடுகளின் காலம் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் வவுனியா மாவட்டத் தலைவி சிவானந்தன் ஜெனிற்றா குறிப்பிட்டார்.

“எத்தனையோ மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளபோதிலும் அவை பல வருடங்களுக்கு முன்னையவை என அரசாங்கம் கூறிக்கொண்டிருக்கின்றது. இந்த புதைகுழியில் உடைகள் கூட உக்கிப்போகாத நிலையில் இருக்குமானால் எத்தனை வருடங்கள் ஆடைகள் உக்காமல் இருக்கும் என்பதை சிந்திக்க வேண்டும். ஆகவே ஆடைகளை அடிப்படையாக வைத்து பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும். எனினும் ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றும் மனித புதைகுழிகள் குறித்த விடயத்தை முடிவுக்கு கொண்டுவர முற்படுகின்றனர்.”

வெகுஜன புதைகுழியில் இருந்து அகழ்ந்து எடுக்கப்பட்ட உண்மையான உரிமையாளர்களைக் கண்டறிய சர்வதேச தலையீடு தேவை என்பதையும் அவர் வலுவாக வலியுறுத்தினார்.

“மரபணு பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். புதைக்கப்பட்டவர்கள் யார் என எவருக்கும் தெரியாது. அப்படியான நிலையில் இதில் புதைக்கப்பட்டவர்கள் யார் என்பதே எங்கள் கேள்வி. யார் என எமக்குக் கூற முடியாது. ஆகவே அதனை கண்டறிய சர்வதேச தலையீட்டுடன் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென சர்வதேசத்திடம் கேட்கின்றோம். உள்ளக பொறிமுறையை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ள நிலையில் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதி பொறிமுறையைதான் கேட்கின்றோம். மனித புதைகுழிக்கும் சர்வதேச விசாரணையையே வலியுறுத்துகின்றோம்.”




கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி தொடர்பான வழக்கு இந்த வருடம் ஓகஸ்ட் 8ஆம் திகதி முல்லைத்தீவு நீதிவான் தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவ, இந்த ஆய்வுகளின் ஊடாக, பாலினம், வயது, உயரம் மற்றும் காயங்கள் குறித்த தகவல்களை அறிந்துகொள்ள எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டார்.

“இந்த அகழ்வின்போது எடுக்கப்பட்ட 25 எலும்புக்கூட்டு தொகுதிகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வைத்தியப் பிரிவிற்கு இடமாற்றப்பட்டு கடந்த 2ஆம் திகதி (ஓகஸ்ட் 2) முதல் ஆய்வுகள் இரண்டு நாட்கள் நடைபெற்றன. எதிர்வரும் வாரங்களிலும் தொடர்ந்து இடம்பெறும். சட்ட வைத்திய நிபுணர்களின் முழுமையான அறிக்கைககள் ஆறு மாதங்களுக்குள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.”

புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள், தொண்ணூறுகளின் நடுப்பகுதியில் அவசரமாக புதைக்கப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்களுடையதாக இருக்க வேண்டுமென, கொக்குத்தொடுவாய் அகழ்வுப் பணிகளுக்கு முன்னோடியாக இருந்த தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவ 2024 மார்ச் மாதம் நீதிமன்றத்திற்கு அறிவித்தார் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்க வேண்டுமென்ற அனுமானத்திற்கும் அவர் வந்தார்.

2023 ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில், கொக்குத்தொடுவாய் மகாவித்தியாலயத்திலிருந்து கொக்கிளாய் நோக்கி சுமார் 200 மீற்றர் தொலைவில், நீர் வழங்கல் திணைக்கள ஊழியர்கள் நீர் குழாய்களை அமைப்பதற்காக நிலத்தை தோண்டிக் கொண்டிருந்த போது, மனித உடல் பாகங்கள் மற்றும் ஆடைத் துண்டுகள் வெளிப்பட்டன.

# மக்கள் தங்களுக்கான சேவைகளை ஒரே இடத்தில் இலகுவில் பெற்றுக்கொள்ள கூடிய வகையில் நகரத் திட்டமிடல்கள் அமைய வேண்டும். வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு!

தேசிய பௌதீக திட்டமிடல் தொடர்பான விசேட கலந்துரையாடல் வட மாகாண பிரதம செயலாளர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் 27/08/2024 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் , கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள், வடக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் அவர்கள்,

ஜனாதிபதி அவர்களின் முயற்சியின் நிமித்தம் இந்த தேசிய பௌதீக திட்டமிடல் நடவடிக்கை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்தவகையில் வடக்கு மாகாண நகரத் திட்டமிடல் தொடர்பான அனைத்து திட்டமிடல்களையும், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் சமர்ப்பித்து அதற்கான அனுமதி பெற வேண்டுமென கோரிக்கை விடுத்தோம். அதற்கமைய, சமர்ப்பிக்கப்பட்ட திட்டமிடல்கள் தொடர்பான தமிழ் மொழியாக்கம் தேவை என மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக, நகர திட்டமிடல்களின் போது புவியியல் கேந்திரங்களை மையப்படுத்தி, இலங்கையின் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்வது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டு இந்த திட்டங்கள் முன்மொழியப்பட்டிருக்கின்றன.

வடக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் அனைத்து துறைகளையும் இணைப்பதற்கான தொடர்பு முறைமை ஒரு சவாலாக காணப்படுகின்றது. அதேபோல யாழ்ப்பாணத்திற்கு வருகை தருவது என்பது பாரிய சவாலாக காணப்படுகின்றது.

வீதி போக்குவரத்து என்பது மிக நெடுந்தூரமாக காணப்படுவதன் காரணமாக முதலீட்டாளர்களின் வருகை மிகவும் பின் தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. ஆகவே நகரத் திட்டமிடலின் போது போக்குவரத்து தொடர்பினை ஏற்படுத்தும் இலகு முறைகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் ஏனைய திட்டங்களை முன்னெடுப்பதற்கு அனுமதிகளை பெற்றுக் கொள்வது தொடர்பில் காணப்படக்கூடிய சிக்கல் நிலைகளை தவிர்த்து எவ்வாறு இலகுவில் முதலீடுகளை மேற்கொள்வது என்பது தொடர்பிலும் கவனம் செலுத்துவது அவசியமாக காணப்படுகின்றது.

நகர திட்டமிடல்களின் போது பெருநகரங்களை அபிவிருத்தி செய்யும் அதே சந்தர்ப்பத்தில் ஏனைய சிறுநகரங்களையும் அபிவிருத்தி செய்து அவற்றையும் பெரு நகரங்களுடன் இணைக்க வேண்டும். அத்துடன் கழிவு முகாமைத்துவம், பயணிகளுக்கான சிறந்த தங்குமிட வசதிகள் உள்ளிட்ட அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கருத்தில் கொண்டு நகரத் திட்டமிடல்களை வடிவமைத்தல் அவசியம். வடக்கையும் கிழக்கையும் இணைக்க கூடிய வட்டுவாகல் பாலத்தினை புனரமைப்பு செய்வது தொடர்பிலும் இந்த செயல்திட்டத்தில் கவனம் செலுத்துவது சிறப்பாக அமையும் என கருத்து தெரிவித்தார்.



# தமிழ் மக்களுக்குக் காலம் இட்ட கட்டளையே 'பொதுவேட்பாளர்'

பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் முடிவு வரைக்கும் தமிழ்த் தேசிய உணர்வோடு தேசமாகத் திரண்டிருந்த தமிழ் மக்கள் யுத்தத்தின் பின்னர் சிதறடிக்கப்பட்டார்கள். அரசின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலில் பிரதேசம், சாதியம், சமயமாகத் தமிழ்த் தேசியம் துண்டாடப்பட்டு வருகிறது. இவற்றால் அரசியல் ரீதியாகத் தமிழினம் மிகவும் பலவீனமாகத் பின்தள்ளப்பட்டுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டே தமிழ் மக்களைத் தேசமாக மீண்டும் திரளச் செய்து அரசியல் அபிலாசைகளை ஒரே குரலில் வெளிப்படுத்தும் நோக்குடன் ஜனாதிபதித் தேர்தலில் தமிழப் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டுள்ளார்.




இந்த முடிவு காலம் இட்ட கட்டளை என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.
ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளராகப் போட்டியிடும் பா. அரியநேத்திரனுக்கும் கூட்டுறவு அமைப்புகளின் பிரதானிகளுக்குமிடையிலான கலந்துரையாடல் சனிக்கிழமை (24.08.2024) நல்லூர் திவ்ய ஜீவன மண்டபத்தில் இடம் பெற்றது. இதற்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.
அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவது என்பது தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு கோட்பாட்டு ரீதியான முடிவு. இதனைப் புரிந்து கொள்ள விரும்பாதவர்கள் வெல்ல முடியாத தேர்தலில் எதற்காகப் போட்டி என்று விதண்டாவாதம் புரிகிறார்கள். எண்ணிக்கையில் மிகப் பெரும்பான்மையாகச் சிங்கள மக்களைக் கொண்ட இலங்கைத் தீவில் தமிழன் ஒருபோதும் ஜனாதிபதியாக வர முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும்.

பொதுவேட்பாளர் ஜனாதிபதியாக வெற்றிபெற முடியாது. ஆனால், தமிழ் மக்களை மீளவும் தேசமாகத் திரளச் செய்வதில் அவர் வெற்றி பெறுவார்.
தென்னிலங்கை வேட்பாளர்களிடையே நான்கு முனைப் போட்டி நிகழும் நிலையில் பொதுவேட்பாளர் தங்களின் வெற்றி வாய்ப்பைப் பாதிக்கும் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். இதனால் பொதுவேட்பாளரை நிறுத்தியுள்ள தரப்புகளுடன் பேச வருமாறு அழைப்புக்கு மேல் அழைப்பு விடுக்கிறார்கள்.

அதே சமயம் அவர்களுடன் நேரடியாகவும், பின்கதவாலும் தொடர்புகளைப் பேணிவருகின்ற தமிழ் அரசியல்வாதிகளின் மூலம் பொதுவேட்பாளருக்கு எதிரான மூர்க்கத்தனமான கருத்துகளும் பரப்பப்பட்டு வருகின்றன. பொதுவேட்பாளர் துரோகியாகக்கூடச் சித்திரிக்கப்படுகிறார்.

பொது வேட்பாளர் பற்றித் தென்னிலங்கை வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தைப் பார்த்த பின்பே முடிவெடுக்கலாம் என்றும் அவர்களுடன் பேரம் பேசலாம் என்றும் தமிழ் அரசியல்வாதிகள் சிலர் கூறிவருகின்றார்கள்.

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான குறைந்தபட்சத் தீர்வையேனும் ஆட்சி அதிகாரங்களில் இருந்த போதுகூடச் செய்ய விரும்பாத தென்னிலங்கைத் தலைமைகளுடன் தேர்தல் நேரத்தில் பேச முற்படுவது அவர்களின் வெற்றிவாய்ப்பை உறுதி செய்வதற்கான ஒரு உத்தியே ஆகும். பொதுவேட்பாளருக்கு எதிரான பரப்புரைகளின் பின்னால் உள்ள கபடத்தனங்களைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

If you're looking for a place to install or upgrade your radio, speakers, subwoofers, lights, remote starters, tracking devices and more; Look no further...

Storm Tech will take care of you with excellence and give you the best prices in Toronto

Feel free to contact us at 647-621-7725 for your free quotation!!

STORM TECH Audio & Lights

# முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் அமிர்தலிங்கத்தின் சிலைக்கு அஞ்சலி செலுத்திய தமிழக திராவிடர் கழகத்தின் தலைவர் பி.வீரமணி!



அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் தமிழகத்தின், திராவிடர் கழகத்தின் தலைவர் பி.வீரமணி, இலங்கை தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் அமிர்தலிங்கம் அறக்கட்டளை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

யாழ்ப்பாணம் - பண்ணாகம், வலிகாமம் - மேற்கு பிரதேச சபை வளாகத்தில் அமைந்துள்ள அமிர்தலிங்கம் அவர்களின் உருவச்சிலைக்கு இவ்வாறு மலர்மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.



# " கொல்லப்பட்ட எம்மவர்கள், கடத்திச் செல்லப்பட்டவர்கள் மரணத்திற்கு , காரணமானவர்களை பாதுகாப்பவர்தான் இலங்கை ஜனாதிபதி.

## எனவே அவர் எமக்குத் தேவையில்லை,

நாட்டின் தலைமைப் பொறுப்பை ஒப்படைக்கும் ஒருவரைத் தெரிவு செய்யும் நோக்கில் நடத்தப்படும் ஜனாதிபதித் தேர்தலில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்த் தாய்மார்கள் பங்குபற்றாது இருக்கத் தீர்மானித்துள்ளனர்.

நாட்டிற்கும் உலகிற்கும் ஒரு பாரதூரமான செய்தியை தெரிவித்து, முல்லைத்தீவு மாவட்டத்திலும் மன்னார் மாவட்டத்திலும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கங்களை வழிநடத்தும் தமிழ்த் தாய்மார்கள் நாட்டின் ஜனாதிபதியாக யார் தெரிவு செய்யப்பட்டாலும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி வழங்கப்பட மாட்டாது என வலியுறுத்தியுள்ளனர்.

போரின் போதும் அதற்குப் பின்னரும் வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்களைக் கண்டறிய சர்வதேச ஆதரவை கோரி, இலங்கையில் நீண்டகாலப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள போரினால் பாதிக்கப்பட்ட தாய்மார், ஓகஸ்ட் 30ஆம் திகதி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறவுள்ள போராட்டங்களுக்கு தமிழ் சமூகத்தின் ஆதரவைக் கோரும் வகையில் ஓகஸ்ட் 27ஆம் திகதி முல்லைத்தீவிலும் மன்னாரிலும் ஊடகவியலாளர் சந்திப்புகளை நடத்தினர்.

செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர்கள் வினவியபோது, ஜனாதிபதித் தேர்தல் குறித்து கேட்கும்போது 'வெறுப்பு' ஏற்படுவதாக வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்டத் தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி தெரிவித்தார்.

"வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு இது வரையில் ஜனாதிபதிகளிடமிருந்தோ அல்லது அரசியல் பிரதிநிதிகளிடமிருந்தோ எந்தவொரு தீர்வும் கிடைக்கவில்லை. இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தல் குறித்து நீங்கள் கேட்கும் போது எமக்கு வெறுப்புதான் ஏற்படுகிறது."

புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவதில் தலையிடமாட்டார் என தனது வலுவான நம்பிக்கையை வெளிப்படுத்திய அவர், இவ்வாறானதொரு சூழ்நிலையில் ஜனாதிபதி தேர்தலில் தாம் எவ்வகையிலும் ஈடுபாடு காட்டப்போவதில்லை எனவும் வலியுறுத்தினார்.

"எங்களில் கொல்லப்பட்டவர்களையோ, கடத்திச் செல்லப்பட்டவர்களையோ, அதற்கு காரணமானவர்களை அவர்களைப் பாதுகாப்பவர் ஜனாதிபதியாவார், அப்படி முடிந்தால், இனிவரும் ஜனாதிபதி, எமக்கு எதிராகக் குற்றமிழைத்தவர்களை சர்வதேச நீதிமன்றத்திற்கு ஏற்றினால் அவரை நாங்கள் வரவேற்போம்."

சிங்கள ஜனாதிபதியை நியமித்தாலும் எந்தப் பயனும் இல்லை எனவும், தனது அன்புக்குரியவர்களுக்கு சர்வதேச நீதியை கோரி வருவதாகவும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் மன்னார் மாவட்டத் தலைவி மனுவல் உதயச்சந்திரவும் ஓகஸ்ட் 27ஆம் திகதி மன்னாரில் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

"வரப்போற ஜனாதிபதி ஒரு சிங்கள ஆட்சியாளராகவே இருப்பார். சிங்கள ஆட்சியாளர் வந்தாலும் காணாமல்போன இளைஞர்களுக்கு தீர்வு கிடைக்கும் என நாங்கள் நம்பவில்லை. அதனால்தான் நாங்கள் சர்வதேசத்தை நாடி நிற்கின்றோம். ஆகவேதான் எந்த ஜனாதிபதி அல்லது அரசியல்வாதி வந்தாலும் யார் வந்தாலும் அதற்கு நாம் பொறுப்பில்லை. யார் வந்தாலும் வரட்டும்."

வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த பலவந்தமாக காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் யாழ்ப்பாணத்திலும், கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் திருகோணமலையிலும் ஓகஸ்ட் 30ஆம் திகதி ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளனர்.



# “நான் இலங்கை குடியரசின் ஜனாதிபதியாக வருவதற்காக களமிறங்கவில்லை.- எமது மக்களின் உரிமைப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்பதை காட்டும் குறியீடே நான்.”

## தமிழ் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன்

பல தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் அமைப்புகளின் ஆதரவுடன் முன்னிறுத்தப்பட்டுள்ள வடக்கின் சுயேட்சை வேட்பாளர் முள்ளிவாய்க்கால் தமிழர் இனப்படுகொலை நினைவிடத்தில் தீபமேற்றி அஞ்சலி செலுத்தி, போரினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டு மைதானத்தில் பொதுக்கூட்டம் ஒன்றையும் நடத்தி ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்துள்ளார்.



ஓகஸ்ட் 18 அன்று ஞாயிற்றுக்கிழமை தனது கன்னிப் பிரச்சார உரையை ஆற்றிய தமிழ் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன், இதுவரை காலமும் நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட எவரும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்கவில்லை என்பதை சர்வதேச சமூகத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் எடுத்துக்காட்டவே தான் தேர்தலில் களமிறங்கியதாக வலியுறுத்தினார்.

“வடக்கு கிழக்கிலே இந்த இனப்பிரச்சினை இன்னும் தீரவில்லை. கடந்த எட்டு ஜனாதிபதிகளுக்கும் வாக்களித்திருக்கின்றோம். அந்த எட்டு ஜனாதிபதிகளாலும் நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம். இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஏமாறுவதற்கு நாம் தயாரில்லை. எங்களுக்கான உரிமைப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. ஆகவே அது தீர்க்கப்பட வேண்டும் என்ற விடயத்தை சர்வதேசத்திற்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் காட்ட வேண்டும் என்ற நோக்கில்தான் இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.”

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதின் நோக்கம் பதவி நாற்காலியில் அமர்வதல்ல எனவும் மாறாக தமிழ் மக்களின் உரிமை சார்ந்த பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டும் ‘குறியீடே’ தான் எனவும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

“நான் இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசின் ஜனாதிபதியாக வருவதற்கு களமிறங்கவில்லை. மாறாக இழந்த ஈழ மக்களின் உரிமை பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்பதை காட்டும் அடையாளமே, குறியீடே நான்.”

வடக்கில் யுத்தத்தின் பின்னர், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பில் மூன்று ஜனாதிபதிகளுடன் கலந்துரையாடிய போதும் எவ்வித பலனும் ஏற்படவில்லை என்பதையும் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் நினைவுகூர்ந்திருந்தார்.

“இந்த நேரத்தில் தமிழ் மக்களின் ஒற்றுமை என்பது சர்வதேசத்தின் மனச்சாட்சியை தட்டும் வாய்ப்பாக இது அமையும். நாம் ஒற்றுமையாக இருக்கின்றோம். முள்ளிவாய்க்கால் போர் முடிவடைந்த பின்னர் நாங்கள் 15 வருடங்களாக உரிமையற்று இருக்கின்றோம். மூன்று ஜனாதிபதிகளுடன் பேசியிருக்கின்றோம். அவர்கள் எந்தத் தீர்வையும் தரவில்லை. ஆகவே உங்களுக்கு வாக்களிக்க நாம் தயாரில்லை. நாங்கள் நாங்களாகவே இந்த நாட்டில் இருக்க விரும்புகின்றோம். இணைந்த வடக்கு கிழக்கில் எங்கள் உரிமையை பெற வேண்டிய கடமை எமக்கு இருக்கிறது.”

இலங்கையில் அதிகாரத்திற்கு வந்த தெற்கில் உள்ள அனைத்து சிங்கள ஜனாதிபதிகளும் தமிழ் மக்களை தொடர்ச்சியாக ஏமாற்றி வந்தமையே இம்முறை வடக்கு, கிழக்கிலிருந்து தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்குக் காரணம் என அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

“புலிகளின் காலத்தில் ஐந்து ஜனாதிபதிகளாலும், அதன் பின்னர் மூன்று ஜனாதிபதிகளாலும் ஏமாற்றாப்பட்டோம். அதன் விளைவுதான் இந்த பொது வேட்பாளர்.”



தமிழ்த் தேசிய அரசியலில் ஈடுபட்டுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஒற்றையாட்சியில் நாட்டின் பெரும்பான்மையினருக்கு மாத்திரம் செயற்படும் அரச தலைவரைத் தெரிவு செய்யும் ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டுமென வலியுறுத்தி வடக்கு கிழக்கில் பிரச்சாரத்தை முன்னெடுத்து வருகின்றது.

பாக்கியசெல்வம் அரியநேத்திரன் அங்கம் வகிக்கும் இலங்கை தமிழ் அரசு கட்சி ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இன்னும் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை.



# “பண்டிதப் பாரம்பரியம் என்பது கல்வி-ஞானம்- அறிவு ஆகியவை சம்பந்தப்பட்ட ஒரு வரலாறு என்பதே” மிகப்பொருத்தமானது”

## “ஈழத்துப் பண்டிதப் பாரம்பரியம்” என்னும் தலைப்பில் கனடாவில் உரையாற்றிய பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தெரிவிப்பு

யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் வாழ்ந்த தமிழ்ப் பண்டிதர்கள் மற்றும் வித்துவான்கள் ஆகியோரால் கட்டிக் காப்பாற்றப்பெற்ற “பண்டிதப் பாரம்பரியம் என்பது கல்வி-ஞானம்- அறிவு ஆகியவை சம்பந்தப்பட்ட ஒரு வரலாறு என்பதே” மிகப்பொருத்தமானது. அதன் வரலாற்றையும் எம் மத்தியில் வாழ்ந்த மேற்குறிப்பிட்ட தமிழ் மொழி மீதான ஆர்வம் கொண்ட கல்விமான்கள் ஆகியோர் பற்றி கனடாவில் நாம் இன்று கலந்துரையாடுவது பெருமைக்குரிய விடயமாகும். இவ்வாறான சந்தர்ப்பத்தை எனக்கு ஏற்படுத்தித் தந்த ‘ரொறன்ரோ தமிழ்ச்சங்கத்திற்கும் அதன் முக்கிய உறுப்பினர்களான எழுத்தாளர் அகில் சாம்பசிவம் மற்றும் சுப்பிரமணியன் ஐயா அவர்கட்கும் எனது நன்றி,”



இவ்வாறு கடந்த 17-08-2024 சனிக்கிழமை“ஈழத்துப் பண்டிதப் பாரம்பரியம்” என்னும் தலைப்பில் கனடாவில் 5633, Finch avenue East, Unit7 என்னும் விலாசத்தில் அமைந்துள்ள ரொறன்ரோ தமிழ்ச்சங்க மண்டபத்தில் உரையாற்றிய, பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தெரிவித்தார்.

பேராசிரியர் நாகராசா சுப்பிரமணியன் ஐயர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மேற்படி உரையரங்கில் பல இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் கனடாவில் வாழும் பேராசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலில் தலைமையுரையாற்றிய பேராசிரியர் நாகராசா சுப்பிரமணியன் ஐயா அவர்கள் பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்கள் தனது மாணவன் என்றும் பின்னாளில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றியபோது அவரது தமிழ் மொழி மற்றும் தமிழ்க் கல்வி தொடர்பான ஆர்வமும் ஆற்றலும் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர்களுக்கு நன்கு புலப்பட்டது என்றும் தெரிவித்து ‘யாழ்ப்பாணத்து பண்டிதப் பாரம்பரியம்’ என்பதை நன்கு உணர்ந்தும் தெரிந்தும் தேடியும் அரிய தகவல்களை எமக்குத் தரவல்லவர் அவரே என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய பேராசிரியர் எஸ் சிவலிங்கராஜா அவர்கள் தான் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 1981ம் ஆண்டு நிரந்தர தமிழ்த்துறை விரிவுரையாளராகப் பதவியேற்று சில மாதங்களில் பேராசிரியர் இந்திரபாலா போர்த்துக்கல் நாட்டுக்கு ஒரு புலமைப் பரிசில் திட்டத்தின் மூலம் சென்று கற்றுவருவம்படி தன்னைக் கேட்டுக்கொண்டதாகவும் ஆனால் பேராசிரியர் கைலாசபதி அவர்கள் தன்னிடம் பேசும் போது யாழ்ப்பாணத்து கல்விப் பாராம்பரியம் தொடர்பான சரியான தகவல்கள் இல்லாது இருக்கும் போது அந்த குறையை நிவர்த்தி செய்யவல்லவர் நீ தான் என்று தன்னிடம் கூறினார் என்றும் தொடர்ந்து, சரியான ஆய்வுகள் செய்து யாழ்ப்பாணத்தின் தமிழ்க் கல்வி மற்றும் பொதுக் கல்வி தொடர்பான பாரம்பரியத்தைப் பற்றி ஆய்வுகளும் அதன் வெளிப்பாடாக நூல்களும் வெளிவருவது என்பது மிகவும் அவசியம் என்றும் தெரிவித்து போர்த்துக்கல் நாட்டுக்கு புலமைப் பரிசில் பெற்று செல்வதிலும் பார்க்க, எமது மண்ணிலேயே தங்கியிருந்து எமது பிரதேசத்தின் கல்விப் பாராம்பரியம் பற்றி ஆராய்ந்து எழுதும் படியும் அவ்வாறு எமது யாழ்ப்பாண கல்விப் பாராம்பரியம் பற்றி கற்றும் எழுதியும் பதிவுகளை மேற்கொண்டால் அதன் தொடர்ச்சி உங்களை இலங்கையின் கல்விப் பாரம்பரியம் என்ற அடுத்த கட்டத்திற்கு உங்களை அழைத்துச் செல்லும் என்று தெரிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக நான் யாழ்ப்பாணத்தில் பண்டிதப் பாராம்பரியம் பற்றியும் ஆராய்ச்சி செய்து கொள்ள வேண்டி ஏற்பட்டது. ஏனென்றால் யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழி கற்றல் அல்லது கற்பித்தல் ஆகியவை தொடர்பாக நாம் பல அத்தியாயங்களை எழுதத் தொடங்குகையில் எமது பகுதிகளில், தமிழ் மொழி தொடர்பான அரிய பணிகளை ஆற்றியவர்கள் பண்டிதர் என்பது அப்போது எனக்கு புலப்பட்டது.

அவர்களைப் பற்றி நான் நிறையவே கற்றுக் கொண்டேன். அவர்களில் பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை- வித்துவான் சொக்கன்- பண்டிதர் குலசிங்கம் உட்பட பலர் தொடர்பாக நான் ஆச்சரியம் தரும் தகவல்களைப் பெற்றுக் கொண்டேன்” என்றார்

இறுதியில் அங்கு உரையரங்கை செவிமடுக்க வந்தவர்கள் கலந்துரையாடல்களில் கலந்து கொண்டு பல அரிய கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்கள்.



# சர்வாதிகார ஜனாதிபதி முறை இலங்கைத் தீவின் சாபக்கேடு என்கிறார் சபா குகதாஸ்

இலங்கைத் தீவின் வரலாற்றில் இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பின் மூலம் கொண்டுவரப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அதனை பயன்படுத்திய ஜனாதிபதிகளான ஜெயவர்த்தன தொடக்கம் ரணில் விக்கிரமசிங்க வரை நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லக் கூடிய வகையில் கையாளவில்லை.

மாறாக ஊழலையும் ஊழல்வாதிகளையும் இனவாதிகளையும் பாதுகாத்து அதன் ஊடாக தமது அதிகாரத்தை தக்க வைக்க முனைந்துள்ளனர் என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

இன்றையதினம் அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு. அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இதுவரை நாட்டின் பின்னடைவுக்கான செயற்பாடுகளையும் அதனை மேற் கொண்ட தரப்புக்களை பாதுகாப்பதிலும் நிறைவேற்று அதிகாரம் பெரும் பங்கு வகித்துள்ளது.

தேர்தல் காலங்களில் நிறைவேற்று அதிகாரம் நீக்கப்பட வேண்டும் என்ற கோசம் மேலோங்கி இருந்தாலும் தேர்தல் முடிவடைந்த பின்னர் அவை மறக்கப்பட்டு இருப்பதை விட கூடுதல் அதிகாரங்களை பெற முடியுமா என அதிகாரக் கதிரைக்கு வருபவர்கள் சிந்திக்கின்றார்கள்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை நீக்கப்பட்டு ஆட்சிப் பீடத்தில் இருக்கும் போது தவறை ஒத்துக் கொண்டு பதவி விலகும் அரசியல் கலாசாரம் உருவாகினால் மட்டுமே ஊழலையும் ஊழல் கூட்டத்தையும் ஒழிக்கலாம் மாறாக சர்வ அதிகாரமுறை தொடர்ந்தல் நாடு ஊழல்வாதிகளின் பாதுகாப்புக் கூடாரமாகவே மாறும் அத்துடன் இனவாதத்தை தணிய விடாது தீயாக எரியவைக்கும்.

நாட்டில் இனவாதம் மேலோங்கி தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு இல்லாமல் நாடு பெரும் பொருளாதார பின்னடைவை சந்தித்த பின்னரும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற பிற்போக்கு சிந்தனை பேரினவாதிகள் மத்தியில் புரையோடிப் போய் உள்ளது என்றால் நாடு முன்னோக்கி செல்ல வாய்ப்பே இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

# 1974 தமிழாராய்ச்சி மாநாடு படுகொலை நினைவேந்தல் தூபி வளாகத்தை சுத்தம் செய்தவர்களுக்கு மக்கள் பாராட்டு!

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னால் உள்ள 1974 தமிழாராய்ச்சி மாநாடு படுகொலை நினைவேந்தல் தூபி வளாகமானது பராமரிப்பு இன்றி புற்கள் வளர்ந்த நிலையில் காணப்பட்டது. இது குறித்து கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.



இந்நிலையில் தன்னார்வ ரீதியாக முன்வந்த சிலர் அந்த பகுதியில் வளர்ந்திருந்த புற்களை வெட்டி சுத்தம் செய்தனர்.

இந்நிலையில் குறித்த பகுதியை சுத்தம் செய்தவர்களை மக்கள் வெகுவாக பாராட்டி வருகின்றனர்.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிவரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலக தமிழாராய்ச்சி மாநாட்டில் ஏற்பட்ட கலவரத்தில் ஒன்பது பேர் படுகொலை செய்யப்பட்டனர்.



உலகலாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடாத்தவிடாமல் அப்போதைய சிறிமாவோ பண்டார நாயக்க தலைமையிலான அரசு, பொலிஸாரை அனுப்பி கலவரத்தை ஏற்படுத்தியது.

இதன்போது ஒன்பது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். தமிழர்கள் மனத்தில் நீங்காத வடுக்களாக இந்தப்படுகொலைச் சம்பவம் பதியப்பட்டது. அதன் வெளிப்பாடாகவே இந்த நினைவேந்தல் தூபியானது அமைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சுமந்திரன், சாணக்கியன், CVK சிவஞானம் போன்ற சிலரே பொது வேட்பாளரை எதிர்க்கின்றனர்

Video - https://we.tl/t-FlFiOWZBnP

சுமந்திரன், சாணக்கியன், சிவஞானம் போன்ற சிலரே பொது வேட்பாளரை எதிர்க்கின்றனர். அவர்களுக்கு பாடம் கற்பிப்பார்கள் என சுரேஸ் தெரிவித்தார்.
கிளிநொச்சியில் பொது வேட்பாளருக்கு ஆதரவாக பிரச்சாரத்தை ஆரம்பித்து வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிக்கையில்,

தமிழ்ப் பொது வேட்பாளருக்கு தமிழரசுக்கட்சியில் மிகப் பெரும்பாலானவர்கள் ஆதரவாக இருக்கின்றாரகள்.

சுமந்திரன், சாணக்கியன், ஊஏமு சிவஞானம் போன்ற ஒரு சிலரைத் தவிர கட்சியின் ஏனைய மேல் மட்டங்களும் சரி, ஏனைய கட்சியின் கீழ் மட்ட தொண்டர்களும் சரி பொது வேட்பாளர் வெற்றி பெற வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள்.

அது மாத்திரமல்ல, அவர்கள் களத்தில் இறங்கி பணிபுரிவதற்கும் தயாராக இருக்கின்றார்கள். யாழ்ப்பாணத்தில் தமிழரசுக்கட்சியினுடைய இளைஞர் அணியைச் சேர்ந்த பலரை சந்தித்து நான் பேசியிருக்கின்றேன்.

இதனை முன்னெடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றார்கள். கிளிநொச்சியைச் சேர்ந்த சிறிதரனும் பொது வேட்பாளரை வாழ்த்தியிருக்கிறார். ஏற்கனவே அதற்கான கூட்டங்களும் - கிளிநொச்சியில் கூடப்பட்டிருக்கிறது.

அதேபோல தலைவராக இருக்கின்ற சேனாதிராஜாவும் இதனை வரவேற்றிருக்கின்றார். ஆகவே தமிழரசுக் கட்சியினுடைய பெரும்பான்மையானோர் இதனை ஆதரித்து வரவேற்றிருக்கிறார்கள்.

ஒரு சிலர் தங்களுடைய சொந்தக் காரணங்களுக்காக இவ்வாறு எதிர்க்கின்றனர். குறிப்பாக சொல்லப் போனால், இலங்கை அரசாங்கம் அங்கு அபிவிருத்திக்காக தனக்கு கொடுத்ததாக சாணக்கியன் கூறியிருக்கின்றார்.

ஆகவே, வாங்கிய பணத்துக்கு பேச வேண்டும் என்ற நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்ப காண வேண்டும் என அவர்கள் யோசித்தால், அதற்காக அவர்கள் சில நல்ல முடிவுகளை எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

கடைசி நேரத்தில் அவர்கள் என்ற முடிவு எடுப்பார்களோ என்று எனக்கு தெரியாது. நிச்சயமாக தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிராக இவர்கள் ஆதரவு முடிவு எடுப்பார்களாக இருந்தால் அது தமிழ்த் தேசியத்துக்கு எதிரான முடிவாகத்தான் இருக்கும் என அவர் தெரிவித்தார்.

தமிழ்ப் பொது வேட்பாளளை ஆதரிக்கும் வகையில் தமிழ் தேசியக் கட்சிகளும், சிவில் அமைப்புக்களுமாக ஒன்றாக இணைந்து தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தியிருக்கிறார்கள்.

ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அனுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட எவரும் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக எந்தவிதமான தீர்வுகளும் இல்லாதகாலகட்டத்தில், ஏற்கனவே பலகட்சிகளுக்கு வாக்களித்தும் ஏமாற்றப்பட்டிருக்கும் சூழ்நிலையில், தொடர்ந்தும் அவர்களுக்கு வாக்களிப்பதன் ஊடாக எதையும் சாதிக்க முடியாது என்ற அடிப்படையில் தமிழ் மக்களினுடைய பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதை வெளிப்படுத்தும் முகமாகவும், தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை தீர்க்காமல் நாட்டின் பொருளாதார பிரச்சினையை தீர்க்க முடியாது என்பதை அவர்களுக்கு விளக்கும் வகையிலும் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் வாக்களிப்பதன் ஊடாக அவர்களுக்கு தெளிவுபடுத்த முடியும்.

எங்களுக்கு இருக்கக் கூடிய ஜனநாயக தளம் என்பது இந்த ஜனாதிபதி தேர்தேலேயாகும். அந்த களத்தை பாவித்து ஒட்டுமொத்த வட கிழக்கு தமிழ்களும் இணைந்து இந்த செய்தியை சொல்ல விரும்புகின்றோம் எனவும் சுரேஸ் இதன்போது தெரிவித்தார்.



# “தமிழர்கள் இலங்கையில் தொடர்ந்து சித்திரவதைக்குள்ளாவதில் எந்த மாற்றமும் இல்லை” என ஐ.நா அறிக்கை சுட்டிக்காட்டுகிறது

சிவா பரமேஸ்வரன்

இலங்கையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற ஆறு மாதம் முதல் அடுத்த ஒன்றரை ஆண்டு காலத்தில் மாத்திரம் பாலியல் துஷ்பிரயோகம் உட்பட 3,000 குற்றச்சாட்டுக்களை இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு பதிவு செய்துள்ளது.

அதிர்ச்சியளிக்கும் தொடரும் துஷ்பிரயோகங்கள் குறித்த இந்த விவரங்கள் ஐ நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையரின் சமீபத்தைய விரிவான அறிக்கையில் வெளியாகியுள்ளது.

“பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினரால் சித்திரவதை மற்றும் மோசமாக நடத்தப்படுவது இலங்கையில் தொடர்ந்து இடம்பெறுகிறது “ என செப்டெம்பர் 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள மனித உரிமைகள் பேரவையின் 57வது கூட்டத் தொடருக்கான அறிக்கை தெரிவிக்கின்றது.

மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகரின் வோகர் டர்க் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில், “நாட்டில் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அனுபவிப்பதில் தொலைநோக்கு பார்வையில் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சில கவலையான போக்குள் காணப்படுகின்றன,” என சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் வடக்கில் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுடன் நடத்தப்பட்ட நேர்காணல்கள் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தமக்கு அளித்த தகவல்களின் அடிப்படையில் இவை கண்டறியப்பட்டுள்ளதாக மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் அந்த அறிக்கை கூறுகிறது.

”கடந்த ஜனவரி 2023 முதல் மார்ச் 2024 வரையிலான காலப்பகுதியில் சித்திரவதை குறித்த 2,845 முறைப்பாடுகளும், இழிவாக நடத்தப்படுவது குறித்து 675 குற்றச்சாட்டுகளும் தமக்குக் கிடைத்ததாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு தெரியப்படுத்தியது ” என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

“ஜனவரி 2023 மற்றும் மார்ச் 2024க்கு இடையில், சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் தொடர்பான 21 வழக்குகள், தடுப்புக் காவலிலிருந்த போது 26 பேர் உயிரிழந்த வழக்குகள் மற்றும் தன்னிச்சையான கைது மற்றும் தடுத்து வைக்கப்பட்டது தொடர்பாக 1,342 முறைப்பாடுகளும் தமக்கு கிடைத்ததாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அரச தரப்பிலிருந்து தடுப்புக் காவலில் 2023இல் 14 பேரும் 2024இல் மூவரும் உயிரிழந்தனர் எனவும், மேலும் தடுப்புக் காவல் மற்றும் சுட்டுக்கொல்லப்படுவது ஆகியவற்றைத் தடுக்கும் நோக்கில் 2747ஃ2023 இலக்கமிடப்பட்டு பொலிசாரால் விடுக்கப்பட்ட அறிக்கையும் மனித உரிமைகளுக்கான ஐக்கியநாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டது.”

”அண்மையில் பிரதானமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில், இலங்கை பாதுகாப்பு படையினரால் தமிழர்கள் கடத்தப்படுவது, சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்படுவது, மோசமாக நடத்தப்படுவது மற்றும் பாலியல் வன்செயல்களுக்கு ஆளாக்கப்படுவது ஆகிய அண்மைய குற்றச்சாட்டுகளை ஆராய்ந்தோம். இவை ஜனவரி 2024 முதல் கிடைத்தவை” என மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகம் கூறுகிறது. அரசியல் எதிரிகள், நியாயத்திற்காகப் போராடுபவர்கள் மற்றும் சந்தேகத்தின் அடிப்படையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் ஆகியோரே பிரதான இலக்காக இருந்துள்ளனர் என்பதை பலதரப்பிலிருந்து உறுதியாகியுள்ளதைக் காட்டும் ‘தெளிவான ஒரு பாணி வெளியாகியுள்ளது’ என அந்த அறிக்கை கூறுகிறது.

”தமிழர்கள், பிரதானமாகக் காணாமல் போனோர், காணிஃசுற்றுச்சூழல் உரிமைகள் அல்லது போரில் பாதிக்கப்பட்டவர்களின் நினைவேந்தல் தொடர்பான போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் மற்றும் முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டவர்கள் என நம்பப்பட்டவர்கள் கண்காணிக்கப்பட்டனர் அல்லது புகைப்படம் எடுக்கப்பட்டனர், பின்னர் பொலிஸின் குற்றத் தடுப்பு பிரிவினர் அல்லது பயங்கரவாத விசாரணைப் பிரிவின் உத்தியோகத்தர்கள் என தங்களை வாய்மொழியாக அடையாளப்படுத்திக் கொண்டவர்களால் கைது செய்யப்பட்டார்கள்.”

அந்த வகையில், கண்கள் கட்டப்பட்டு அடையாளம் தெரியாத இடங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்ட அவர்கள் மூன்று தொடக்கம் ஐந்து நாட்கள் வரை விசாரிக்கப்பட்டதாகவும், பாதுகாப்பு படையினர் சித்திரவதை மற்றும் கொடூரமான, மனிதாபிமானமற்ற, அல்லது இழிவான முறையில் நடத்தப்படுவதற்கு பல்வகையான உத்திகளைக் கையாண்டதாகவும் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து நம்பத்தகுந்த தகவல்கள் கிடைத்துள்ளதாக மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

“விசாரணையின் போது அல்லது தடுத்து வைக்கப்பட்டபோதோ தாங்கள் பாலியல் துஷ்பிரயோகம், விதைப்பைகளை அழுத்துவது, பலவந்தமாக நிர்வாணமாக்குவது, மார்பகங்களைக் கடிப்பது போன்ற பாலியல் சித்திரவதைகளை அனுபவித்ததாக பலர் கூறினர். அதுமாத்திரமன்றி அப்படியான சித்திரவதை அனுபவிப்பதை நிறுத்துவதற்காக, தகவல்களைப் புனைந்து சொல்வது அல்லது ‘ஒப்புக்கொள்வது’, அல்லது அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு வாசிக்க இயலாத சிங்கள மொழியில் உள்ள ஆவணங்கள் அல்லது வெற்றுத்தாள்களில் கையொப்பமிடச் செய்வது ஆகியவற்றைச் செய்யும் நிலை ஏற்பட்டது எனவும் சிலர் கூறினர்.”

“அவ்வகையில் தொடர்ச்சியாக நடைபெற்ற சம்பவங்கள் காரணமாகத் தவறிழைத்தவர்களின் பைகள் நிரம்பின. மேலும் பாதிக்கப்பட்டவர்கள் நாட்டைவிட்டுத் தப்பியோடினர். போர் முடிந்த பின்னர் தொடர்ச்சியாக அதிகார துஷ்பிரயோகம் மற்றும் ஊழல் ஆகியவையும் அதைச் செய்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாத சூழலும் தொடர்கின்றன.” என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

”இறுதியாக குடும்ப உறுப்பினர் ஒருவர் இடைத்தரகர் மூலம் பாதுகாப்பு படையில் இருக்கும் யாராவது ஒருவருக்கு .லஞ்சம் கொடுத்த பிறகு அவர்கள் இறுதியாக விடுவிக்கப்பட்டனர் என செவ்வி காணப்பட்ட பெரும்பாலானவர்கள் கூறினர். பின்னர் அவர்கள் இலங்கையிலிருந்து வெளியேறினர்.”

எனினும், அரசாங்கமோ இந்த குற்றச்சாட்டுகளில் போதிய தகவல்கள் இல்லை என பதிலளித்ததாகவும், கடத்தல், சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்படுவது மற்றும் சித்திரவதை ஆகியவை குறித்த குற்றச்சாட்டுகள் குறித்து கவனத்திற்கொள்வதாகவும், விசாரணைகள் மற்றும் வழக்குகள் பதிவு செய்யப்படுவது குறித்து அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் கூறியுள்ளதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

இதேவேளை இலங்கை அரசு “தன்னிச்சையான கைதுகள், சட்டவிரோத கொலைகள், சித்திரவதை, பாலியல் வன்முறை மற்றும் இதர மனித உரிமை மீறல்கள் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன, என்பதையும் மேலும் அவை தீவிரமாக விசாரிக்கப்படு தவறிழைத்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் எனவும், எவ்விதமான சந்தேகங்களுக்கும் இடமின்றி இராணுவம், புலனாய்வுத்துறை மற்றும் பொலிசாருக்கு வெளிப்படையாக அறிவுறுத்தி உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும்” எனவும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் வலியுறுத்தியுள்ளது.

For All Your Traveling Needs
Cheapest Air Fare In Town
Please call Mr. Lavan

Lowfare
travels and tours

Phone: 416.261.0555
2625 Eglington Ave East
Scarborough, Ontario
M1K 2S2

# தேசம்

NATION THE THESAM

EXPERIENCE THE DIFFERENCE
RE/MAX ACE
REALTY INC, BROKERAGE
Experts In The Local Market



Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment

Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
toronto.baskaran@gmail.com

Issue - 06 | Once a Month | August 2024

## தமிழ் மக்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சனைகளை சர்வதேசத்திற்கு சொல்வதற்கு நாம் எடுக்கும் முயற்சிகளில் ஒன்றே “பொது வேட்பாளர்“ ஆகும்

பக்கம் 16



தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
TELO



## கொக்குத்தொடுவாயில் மீட்கப்பட்ட எலும்புகள் யாருடையதாக இருந்தாலும், நீதி வழங்கப்பட வேண்டும்

பக்கம் 17

## சுமந்திரன் – சாணக்கியன் போன்ற சிலரே எமது பொது வேட்பாளரை எதிர்க்கின்றனர்

பக்கம் 22





## கொல்லப்பட்ட எம்மவர்களின் மரணங்களுக்கு காரணமானவர்களை பாதுகாப்பவரே இலங்கை ஜனாதிபதி

பக்கம் 19